# வேலைக்குத் திரும்பிய பின்னரே பேச்சுவார்த்தை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★




ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 11
இதழ்: 296
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 21 நம்ழான் 25 சனிக்கிழமை [6-12-69]




# இன்று ஜி. சி. ஈ. (உயர்) பரீட்சை; வினாத்தாள்கள் வானில் வந்தன

## பஸ்களில் மாணவருக்கு முதலிடம் அவசர தபால் பெறவும் வசதி

யாழ்ப்பாணம், சனி

புகையிரதப் பகுதி சாரதிகளதும் பாதுகாவலர்களதும் வேலைநிறுத்தம் இன்று தொடர்ந்து ஆருவதுநாளாக நடைபெறுகின்ற போதும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி ஜி. ஸி.ஈ. (உயர்தர பரீட்சை)இன்று முதல் நாடு முழுவதுப் நடைபெறும். வடபகுதியில் இன்று முதல் 1 ஸ்தானங்களில் நடைபெறும் இப்பரீட்சையில் சுமார் 30000க்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றுகின்றனர். இவர்களுக்காக வடபகுதி முழுவதும் இ போ ச பஸ்கள் இன்று முதல் சேவையில்லீடுபத்தப்படவிருக்கின்றன

### பரீட்சார்த்திகளுக்கு பஸ்களில் முதலிடம்

இன்று ஆரம்பமாகும் ஜீ.ஸி.ஈ உயர்தர பரீட்சையில் தேற்றும் மாணவர்கள் பஸ்களுக்கு நிற்கும் போது தங்கள் பரீட்சை அடையாள அட்டையையும் [illegible]

இ போ ச முகாமையாளர் திரு கே ஆர் வேலுப்பிள்ளை நேற்று உத்தரவிட்டுள்ளார்.

### வினாத்தாள்கள் வந்துசேர்ந்தன

புகையிரதப்பகுதி வேலைநிறுத்தம் காரணமாக பரீட்[illegible] [illegible]தன. இவை நேற்று சகல பரீட்சை அதிகாரிகளுக்கும் வடமாநில வித்தியாதிபதி திருஎஸ். தணிகாசலத்தினுல் அனுப்பிவைக்கப்பட்டன. பரீட்சைககான முழு ஒழுங்குகளும் எந்தத்தடையுமின்றி மேற் கொள்ளப்[illegible]

### சந்திரப் பாறை மிகப் பழமையானது

பம்பாய், டிச.5

பூமியின் எந்தப் பாறையையும் விட சந்திரப் பாறை மிகப் பழமையானதென்றும் ஐம்பது கோடி ஆண்டுகளுக்குமேலான பழமை வாய்ந்ததென்றும் இந்திய விஞ்ஞானியொருவர் கூறியிருக்கிருர். அப்பல்லோ-1 1வீரர்கள்சந்திரனிலிருந்து கொண்டு வந்த சந்திரப் பாறையை ஆராய்ந்த பிலால் என்ற இந்த விஞ்ஞானி தொடர்ந்தும் அந்தப் பாறைபற்றிய ஆராய்ச்சி செய்து வருகிருர்.

'தேசிய அரசாங்கத்திலிருந்து

## தமிழரசுக்கட்சி விலகினுலும் தமிழர் வெளியேறவில்லை'

### அமைச்சா பிலிப் கூறுகிருர்

கொழும்பு, வெள்ளி

"தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறினுலும் தமிழர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறவில்லை. தேசிய அரசாங்கம் இன, மத, மொழி வேறுபாடு பாராட்டாமல் சேவையாற்றுகிறது'' என்று கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இன்று ஆட்சி மன்றத்தில் கூறினுர்.

கைத்தொழில் அபிவிருத்தி மசோதா விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் அவர் இப்படி கூறினுர்.

'தேசிய அரசாங்கம் கைத்தொழிற்சாலைகளை பொருத்தமான இடங்களில் அமைக்குமே தவிர, முந்திய அரசாங்கம் போன்று லட்சக் கணக்கான ரூபாய்களை தண்ணீராக விரையமாக்க மாட்டோம்' என்ருர்.

## கொழும்பு பல்கலைக் கழகம் மூடப்படுகிறது

கோட்டை, வெள்ளி

கொழும்பு இலங்கை பல்கலைக்கழகம் நாளை [illegible]

## ஆஸ்பத்திரி தொழில்நுட்ப [illegible] வேலைக்கு திரு[illegible]பினர்

யாழ்ப்பாணம், சனி [illegible] பியதாக அறியப்படு[illegible]து.

## மந்திரிசபை தீர்மானம்

கொழும்பு, வெள்ளி

வேலைநிறுத்தம் செய்யும் ரயில்வே தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த அரசாங்கம் தயாராக இல்லை என அறிவித்திருக்கிறது. வேலைக்குத் திரும்பிய பின்னரே பேச்சுவார்த்தை நடாத்தப்படுமென கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறது.

புகையிரத என்ஜின் சாரதிகள், பாதுகாவலர்கள் வேலைநிறுத்தம் சம்பந்தமாக மந்திரிசபை இன்று கூடி ஆராய்ந்தது.

வேலைக்குத் திரும்பிய பின்னரே பேச்சுவார்த்தை நடாத்துவதென்றும், இப்போது பேச்சுவார்த்தைக்குத்தயாராக இல்லை என்றும் மந்திரிசபை இன்று தீர்மானித்தது.

அரசாங்கத்தின் இந்தப் பிடிவாதமான போக்குக் குறித்து அடுத்து எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கை குறித்து வேலைநிறுத்தம் செய்யும் ரயில்வே இரு தொழிற்சங்கங்களும் நாளை கூடி ஆராயவிருக்கின்றன

## உணவுப் பொருள் தடைப்படாதாம்

கோட்டை, வெள்ளி

அரிசி, மாவு மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருள்களையும் எண்ணெய். டீசல போன்ற எரிபொருள்களையும் மாகாணங்களுக்கு அனுப்பும் வேலைகள் தங்குதடையின்றி நடைபெறுமென்று ரயில்வே அதிகாரியொருவர் தெரிவித்தார் இன்று காலையில் அரிசி, மாவு முதலிய பொருள்களுடன் ஏழுசரக்கு வண்டிகள் கொழும்பிலிருந்து நாவலப்பிட்டி, ஒப்பனுயக்கா, மாத்தறை, கண்டி ஆகிய இடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் எண்ணெய் வண்டியொன்று கட்டுநாயக்காவுக்கு விசேஷமாகச் சென்றதாகவும் அந்த அதிகாரி கூறினுர்.

கொழும்புப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட பிரயாணிகள் ரயில் சேவை தொடர்ந்து நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்புக்கும் அழுத்தகம, வியாங்கொடை, பொல்காவல, போலவத்தை ஆகிய இடங்களுக்குமிடையில் இன்றுமாலையும் நான்கு ரயில்கள் சேவைசெய்ததாக அந்த ரயில்வே அதிகாரிகூறினுர்.

இதேசமயம் கொழும்பு நகரில் பஸ்போக்குவரத்துச் சேவையும் முழு அளவில் நடைபெற்றுவருவதாக இ. போ. ச. அதிகாரியொருவர் சொன்னுர்.

ரயில் என்ஜின் சாரதிகளினதும் 'கார்டு' களினதும் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது,

## சரக்குவண்டி மட்டும் இன்று சேவை

யாழ்ப்பாணம், சனி

சரக்கு வண்டியை தவிர வேறு எந்த புகைவண்டியின் சேவையும் இன்று நடைபெருதென புகையிரதப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புகையிரத சேவை பற்றி இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென்றும் யாழ்ப்பாணம் புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புகையிரத சேவை ஸ்தம்பித்ததை தொடர்ந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பிரயாணிகள் அதிகரித்துள்ளனர்.

தனிப்பட்ட வான்களும் கார்களும் புகையிரதசேவை நடைபெறும் பகுதிகளில் சேவையில் ஈடுபட்டுள்ளன.

வடபகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆரம்பமாகும் ஜீ.ஸி.ஈ உயர்தர பரீட்சையில் தேற்றும் மாணவர்கள் பஸ்களுக்கு நிற்கும் போது தங்கள் பரீட்சை அடையாள அட்டையையும் கொண்டு செல்லவேண்டும் என்றும் இவர்களுக்கே பஸ்களில் 'முதலிடம் கொடுக்க வேண்டுமென்றும் சகல இ போ ச சாரதிகள் கண்டக்டர்களுக்குப் வடபிராந்திய ...டுள்ளார்.

## விஞத்தாள்கள் வந்துசேர்ந்தன

புகையிரதப்பகுதி வேலை நிறுத்தம் காரணமாக பரீட்சைப்பகுதியின் விசேஷவாகனமொன்றில் பரீட்சை விஞத்தாள்கள் நேற்றுமுன் தினம் வடபகுதி கல்வி இலாகாவுக்கு வந்து சேர்ந்திருஎஸ். தணிகாசலத்திஞல் அனுப்பிவைக்கப்பட்டன. பரீட்சைக்கான முழு ஒழுங்குகளும் எந்தத்தடையுமின்றி மேற்கொள்ளப்பட்டுவிட்டதாக கல்வி அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார். (கா நி)

# ஆஸ்பத்திரி தொழில்நுட்ப உதவியாளர் வேலைக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், சனி

ஆஸ்பத்திரி ஆய்வு கூட தொழில் நுட்ப உதவியாளர் நேற்றுக் காலை வேலைக்கு திரும்பிஞர்கள். யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் வேலை நிறுத்தம் செய்த தொழில் நுட்ப உதவியாளர் மூவரும் நேற்று வேலை நிறுத்தத்தை கைவிட்டனர்.

வேலைக்கு திரும்பும்படி தாய்ச் சங்கத்திடமிருந்து நேற்றுக் காலை கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இவர்கள் வேலைக்கு திரும்பியதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பூட்டப் பட்டிருந்த வெளிநோயாளர் பகுதி ஆய்வு கூடம் நேற்றுக்காலை 11 மணிக்கு திறக்கப்பட்டது. தொழில் நுட்ப உதவியாளர் நேற்று பிற்பகல் 4 மணிவரை வேலை செய்தனர்.

கடந்த 9 தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வரும் ஆஸ்பத்திரி ஆய்வு கூட தொழில் நுட்ப ஊழியர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

# கழகம் மூடபபடுகிறது

கோட்டை, வெள்ளி

கொழும்பு இலங்கை பல்கலைக்கழகம் நாளை 6-ம் திகதி முதல் மூடப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர் விடுத்த பயமுறுத்தலைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்திலிருந்து வெளியான அறிக்கையொன்று இதனைத் தெரிவித்தது.

புகையிரத சேவை பற்றி இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென்றும் யாழ்ப்பாணம் புகையிரத ...

தனிப்பட்ட வான்களும் கார்களும் புகையிரதசேவை நடைபெறும் பகுதிகளில் சேவையில் ஈடுபட்டுள்ளன.

வடபகுதி

# சகல பொலிசாரதும் இடமாற்றம் ரத்தானது

## உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியிலிருந்து ஜனவரி மாதம் இடமாற்றலாகி வெளி மாகாணங்களுக்குச் செல்லவிருந்த சகல பொலிஸாரினதும் இடமாற்றம் நேற்று ரத்துச் செய்யப்பட்டது

இத்தகவல் உத்தியோக பூர்வமாக வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கு நேற்று கொழும்பு பொலிஸ் தலைமைக்காரியாலயத்திலிருந்து அறிவிக்கப்பட்டது.

வடபகுதியிலிருந்து கான்ஸ்டபிள்களும், சார்ஜன்டுகளுமாக தமிழ் பொலிசார் உட்பட 145 பேர் வெளி மாகாணத்துக்கு இடமாற்றலா கியிருந்தனர்.

அடுத்த பொதுத் தேர்தலை முன்னிட்டு இவர்களை இங்கு தொடர்ந்து கடமையாற்ற அனுமதிக்கவேண்டுமென பொலிஸ் சுப்பிரிண்டன் பொலிஸ் தலைமை அதிகாரிகளைக் கேட்டதைத் தொடர்ந்தே இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (க. நி)

# வடக்கில் மட்டுப்படுத்தப்பட்ட சேவையும் நின்றது

யாழ்ப்பாணம், சனி

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம்-பளை சேவையிலீடுபட்ட புகையிரதங்கள் நேற்றுச் சேவையில் ஈடுபடவில்லை நேற்றுக்காலைமட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்துக்கு ஒரு சரக்கு ரயில் சென்றது.

இந்தரயிலில் ஒருபிரயாணி கூட பிரயாணம் செய்யவில்லை. இதே ரயில் நேற்று மாலை அநுரதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிவந்த போதும் பிரயாணிகள் எவரும் வரவில்லை. எண்ணை உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இந்த ரயிலில் அனுப்பிவைக்கப்பட்டன

புகையிரத நிலைய ஊழியர்கள் அனைவரும் வேலையெதுவுமின்றி சும்மா இருப்பதாகக் காணக்கூடியதாகவிருக்கிறது

கடந்த மூன்று தினங்கள் போலவே நேற்றும் யாழ்ப்பாணம்-கொழும்பு தொலைபேசிச்சேவை சீராக இயங்கவில்லை இதனுல் நேற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புடன் தொலைபேசித் தொடர்புகொள்ள பல மணிநேரம் தாமதமிருந்தது

நேற்று முன்தினம் மாலை பஸ்ஸில் யாழ்ப்பாணம்வந்த அநுரதபுரம், கொழும்பு தபால்கள் நேற்றுக் காலையிலே விநியோகம் செய்யப்பட்டன. நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்திலிருந்து அநுரதபுரம் வரை தபால்வான் ஒன்றில் கொழும்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த வான் கொழும்பு, காலி பகுதிக்கடிதங்களுடன் நேற்றுப்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது இவைகள் நேற்றே தரம்பிரிக்கப்பட்ட போதும் விநியோகம் செய்யப்படவில்லை புகையிரத வேலைநிறுத்தம் முடிவடையும் வரை தபால் விநியோகம் இவ்வாறே நடைபெறுமாம்

## அவசரகடிதங்கள் நேரில் பெறலாம்

முககியமான தபால்கள் காசுக்கட்டளைகள் போன்றவற்றை பொதுமக்கள் யாவரும் அன்று மாலையே பெற விரும்பிஞல் யாழ் தபால் நிலையத்துககு வந்து அவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என போஸ்ட் மாஸ்டர் திரு. ஏ. ஈ. ஜே. பெனடிக்ட் நேற்றுச்சொன்ஞர்.

## கச்சேரி வேலை தாமதம்

தபால், தொலைபேசிச் சேவை சீராக இல்லாததால் கச்சேரியில் பல முக்கிய வேலைகள் தடைப்பட்டுள்ளதாக கச்சேரி அதிகாரி ஒருவர் சொன்ஞர். நேற்றுக் காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரிக்கு ஒரு கடிதம் மட்டுமே வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று வெள்ளிக்கிழமையாதலால் யாழ். -கொழும்பு விமான சேவை காலையில் நடைபெறவில்லை. மாலையில் வந்த விமானத்தில் பல நூற்றுக்கணக்கான தந்திகள இங்கு வந்தன. சுமார் 600 தந்திகள் நேற்றுமாலை அதே விமானத்தில் கொழும்புக்கும், அதற்கு அப்பாற்பட்ட இடங்கட்கும் அனுப்பிவைக்கப்பட்டன. (கா. நி)

## மின்சாரம் தாக்கியது

யாழ்ப்பாணம், சனி

மின்சாரத் தாக்குதலுக்குள்ளான பெரேரா என்பவர் அறிவிழந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (கா நி)

## சுருட்டுத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

# சம்பள நிர்ணய சபையை கூட்டும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

சுருட்டுத் தொழிலாளரின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு உடனடியாக யாழ்ப்பாணத்தில் சம்பள நிர்ணய சபையைக் கூட்டும்படி சம்பள நிர்ணயசபை அங்கத்தவர்களான திரு. ஆ. துரைராசசிங்கம், திரு. முத்தையா, திரு. தியாகராசா ஆகியோர் சம்பள நிர்ணய சபைத் தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆயிரம் சுருட்டுக்கு 15 ரூபாய் கொடுப்பதை சட்டமாக்குவதற்கே சம்பள நிர்ணயசபையைக் கூடும்படி இவர்கள் கேட்டுள்ளனர்.

இலங்கை சுருட்டுத்தொழிலாளர்சங்க காரியதரிசிதிரு. முதலியாரும் சம்பள நிர்ணயசபையைக் கூட்டும்படி கோரியிருக்கிருர்.

## 8000 பேர் திரும்பினர்

சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்த சுருட்டுத் தொழிலாளர்களில் இதுவரை சுமார் 8,000 பேர் வேலைக்கு திரும்பியிருக்கிருர்கள். சுமார் 125 உற்பத்தியாளர்கள் சம்பளமாக 15 ரூபாய் கொடுக்க சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்தே தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிஞர்கள்.

சம்பள உயர்வு கோரி வடபகுதியில் சுமார் 13,000 சுருட்டுத் தொழிலாளர்கள் இம்மாதம் 1-ம் திகதி வேலை நிறுத்தம் செய்தார்கள், இவர்களில் இன்னும் 5,000 பேர் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

## புறறுநோய்கிருமி கண்டுபிடிப்பு

நியூயோர்க்டிச 5

மனித புற்றுநோய் விஷக்ருமியொன்றை முதன்முதலாக இரண்டு அமெரிக்க வைத்திய நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். இதுபற்றி அவர்கள் வைத்திய நிபுணர்களும் விஞ்ஞானிகளும் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் விளக்கிக் கூறினர் இக்கிருமியைக் கண்டுபிடித்ததன் மூலம் புற்றுநோயை தடுக்கவும் சிகிச்சைசெய்யவும் வழிகாண முடியுமெனக் கருதப்படுகிறது-

இதேசமயம் புற்றுநோயைக்குணப்படுத்தக்கூடிய மருந்தொன்றை தாங்கள் கண்டுபிடித்திருப்பதாக ஜப்பானிய வைத்திய நிபுணர்குழுவொன்று தெரிவித்திருக்கிறது.

# வாலிபர் வெட்டப்பட்டார்; இருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நேற்றுமுன் தினம் மாலை நடைபெற்ற கைகலப்புச் சம்பவமொன்றில் இளையதம்பிபொன்னுத்துரை என்ற வாலிபர் வாளால் வெட்டப்பட்டாராம்.

23 வயதுடைய இந்த வாலிபர் இப்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்பட்டுள்ளார். இவரது வாக்குமூலம் இன்னமும் பதிவுசெய்யப்படவில்லை

இதுசம்பந்தமான விசாரணையை யாழ். குற்றத் தடுப்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசூரியா மேற்கொண்டுள்ளார். சந்தேகநபர் இருவர் தலைமறைவாகியுள்ளனர். (கா. நி)

## இ. போ. ச. தொழிறசங்கங்கள் ஆராய்ந்தன

கொழும்பு, சனி

இலங்கை போக்குவரத்து சபை தொழிற்சங்கங்கள் இன்று கூடி ரயில் ஊழியர் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்கு தம்மை அரசாங்கம் பயன் படுத்துவதாகக் குற்றஞ்சாட்டின.

இது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தன.

எந்நேரத்திலும் இ. போ, ச, ஊழியர்களும் நேரடி நடவடிக்கையில் இறங்கலாம் என்று தொழிற்சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## புலோலியில் வேலை நிறுத்தம்

புலோலி, வெள்ளி

யாழ்.குடா நாட்டின் சுருட்டு தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தமாக புலோலியில் உள்ளசுருட்டுத் தொழில் நிலையத்திலும் கடந்த மூன்று நாட்களாகத் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லாது வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளார்கள்.

ஐம்பதிற்கு மேற்பட்டவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளார்கள்.

சம்பளஉயர்வுகோரிவேலை நிறுத்தம் செய்த சுருட்டுத் தொழிலாளர்களுக்குசம்பள உயர்வு வழங்கும் வரை தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெறுமென்றும் சுருட்டுத்தொழிலாளர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தர்ர். வல்வெட்டி, அச்சுவேலி ஆகிய இடங்களுக்கு சென்று வேலை நிறுத்தம் பற்றி ஆராய்ந்து மேலும் வேலை நிறுத்தம் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## நாவலர் பாடசாலை நூற்ருண்டு விழா

கோப்பாய், வியா

கோப்பாய் நாவலர் பாடசாலையின் நூற்ருண்டு விழாவை மிக விரிவான முறையில் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளையும், பாடசாலை கட்டட வளர்ச்சிக்கான அபிவிருத்தி வேலைகளையும் பாடசாலைப்பழையமாணவர்சங்க மூலம் மேற்கொள்ளப்போவதாக சங்க செயலாளர் திரு. கே. சதானந்தன் தெரிவித்துள்ளார்.

நாவலர் பெருமாஞல் கட்டப்பட்ட இப்பாடசாலையின் நூற்ருண்டு விழா 1972-ம் ஆண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திரா அறிவிப்பு

# 'ஆட்சிமன்றத்தை கலைக்கும் எண்ணமில்லை'

புதுடில்லி, டிச. 5

''ஆட்சிமன்றத்தைக் கலைக்கும்படிகோரும்எண்ணமில்லை' என்று பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்திஇன்று தெரிவித்தார்.

ஆட்சிமன்ற காங்கிரஸ் கட்சி நிர்வாகக் குழுவிடம் அவர் இன்று புதுடில்லியில் அறிவித்தார்.

''விரைவில் இடைத்தேர்தல் நடக்கப் போவதாக வீண்புரளியை யாரோ கிளப்பி விட்டார்கள், அதில் உண்மையில்லை'' என்றுஅவர் கூறிஞர்.

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டை

கொழும்பு, வெள்ளி

அச்சுவேலியில் அரசாங்கம் நிறுவவிருக்கும் கைத்தொழில் பேட்டைக்கான வேலைகள் ஜனவரி நடுப்பகுதியில் ஆரம்பமாகும்.

கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தஞ இத்தகவலை இன்று ஆட்சிமன்றத்தில் வெளியிட்டார்.

## ரூபா5000பரிசு

புதுடில்லி டிச: 5

தேசீய ஒருமைப்பாட்டைபாதுகாக்கவும் வகுப்பு வாதத்தைக் குறைக்கவும் தன் பங்கைச் செலுத்தும் சிறந்தபத்திரிகையாளர்ஒருவருக்கு 5000 ரூபாய் பரிசு வழங்குவதென்று இந்திய ஒற்றுமைக் கழகம் தீர்மானித்திருக்கிறது.


தற்பொழுது விற்பனையாகின்றது

ஈழநாடு தினக் குறிப்பு 1970

(வழமையானது)

சென்ற வருடங்களிலும் கூடிய தகவல்களுடன் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

விலை ரூ. 1-35 சதம்

எமது பத்திரிகை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

1864



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்


## விற்பனைக்கு

இயந்திரம்:

16 H. P. (Black Stone) டீசல் என்ஜின் நல்ல நிலைமையில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. பார்வையிட்டு விலை கேட்கவும்: வ. கந்தையா, பிரதானவீதி, இளவாலை, யாழ்ப்பாணம். 1588

வான்:

சவர்லட் வான் M W விற்பனைக்குண்டு இன்றும் நாளையும் பார்வையிடலாம். கூடியவிலை கேட்பவருக்குக் கொடுக்கப்படும். விபரங்கட்கு: கு. இராசரத்தினம், மெக்கானிக், மூளாய், சுழிபுரம். 1589

## தேவை

துவிச்சக்கரத்திலும், காரிலும் சென்று சோப்பும் பற்பொடியும் வியாபாரம் செய்ய அனுபவமுள்ள ஒருவர் தேவை. 23-12-69 க்கு முன் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூபா 500/- கட்டவேண்டும். ச. மா. செந்திவேல். நடராஜா வீதி, வல்வெட்டித்துறை. 1586

THE JAFFNA ACADEMY
Chundikuli, Jaffna
Phone No. 617.

1970 - Sessions commence on 3rd January 1970. SPECIAL PRACTICAL CLASSES for U. E. Students sitting for the December 1969, Examination will commence on 15th December 1969 2 Practicals per Subject per week.

Rapid revision classes in the evenings for G. C. E. (Advanced-Level) arts Students sitting for the April 1970 Examination. Commence in January

DIRECTOR
1840

## சுழிபுரம் சந்தைக் குத்தகை ஏலவிற்பனை

1969-ம் ஆண்டு மார்கழி மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தைக்குத்தகை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விபரங்கள் கிராம சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளவும்.

சு. கந்தசுவாமி.
தலைவர்,
சுழிபுரம் கிராமசபை.
கி.ச. காரியாலயம்,
சுழிபுரம், 4-12-69. 1865


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 அஸான்.

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்

## பதவி வெற்றிடம்

பின்வரும் காலிஸ்தானத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி முகாமையாளர்:- வாதரவத்தை கிளை ஸ்தாபனம் (சில்லறை வியாபாரம்)

தகைமைகள்

அ. ஜே.எஸ்.ஸி: - வியாபார அனுபவம் அல்லது கல்விப்பொதுத் தராதர(சாதாரண தரப் பத்திரம்.

ஆ. வயது 25—40.

இ. சம்பளம்:- ரூபா 125/- — 200/- ரூபா 6.25 12

ஈ. பிணை:- ரொக்கம் ரூபா 1000/- காணி ரூபா 2000/-.

உ. தகைமைகாண் நிலை:- ஒரு வருடம்.

விண்ணப்பங்கள் டிசெம்பர் மாதம் 15-ந் திகதிக்குமுன் [15-12-69] பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும் தராதரப் பத்திரப் பிரதிகளுடனும். பிறப்புச்சாட்சிப் பத்திரப் பிரதியுடனும். அனுப்பப்படல்வேண்டும். விண்ணப்ப மேலுறையில்


## யாழ்ப்பாண மாநகரசபை
# கேள்வி அறிவித்தல்
## சந்தைக் குத்தகைகள் — 1970

1-1-1970 தொடக்கம் 31-12-1970 வரை கீழ்க்காணும் சந்தைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 13-12-1969-ந் திகதி சனிக்கிழமை பி. ப. 3-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும். கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் போடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 12-12-69 வெள்ளிக்கிழமைபி. ப. 3-00 மணிவரை அதற்குரிய பணத்தைச் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர் | கேள்விப்பத்திரத்தின் விலை | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குச் செலுத்தப்படவேண்டிய பணம். | கேள்விப் பத்திரங்களைப்பெறுவதற்குமுன் நொத்தாரிசின் உறுதிக்காகச் செலுத்தப்பட வேண்டிய பணம். |
|---|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ சதம் |
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 2. பெரியகடை மீன் சந்தையும் மீன் சந்தையில்கடதாசி விற்பதற்கான உரிமையும் | 10-00 | 250-00 | 250-00 |

ஏற்கனவே கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்பட வேண்டிய பணத்தையும், கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிசின் உறுதிக்காகச் செலுத்தப்பட வேண்டிய பணத்தையும் செலுத்தியுள்ளவர்கள், பணம் செலுத்தப்பட்டதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து, கேள்விப்பத்திரத்தின் விலையான ரூ. 10/-ஐச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதர விபரங்களை நேரில் வந்து அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
4-12-1969. 1863

அ. த. சுந்தரம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


## உதய தாரகையின் உதைபந்தாட்டப் போட்டி

மல்லாகம், வெள்ளி

வடமாகாண ரீதியில் 12 வது தடவையாக குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினர் நடாத்தவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 10ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

போட்டியை இரு பிரிவுகளாக முதற் பிரிவு, இரண்டாம் பிரிவு என இரு வகையில் நடத்தவிருக்கின்றனர். சுற்றுப்போட்டியில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்படும் கோஷ்டிக்கு வெற்றிக் கிண்ணம் பரிசாக வழங்கப்படவிருக்கிறது.

மண்டைதீவிற்கு

## விளையாட்டு மைதானம்

மண்டைதீவு, வெள்ளி

மண்டைதீவில் இதுவரை விளையாட்டு மைதானம் இல்லாதிருந்த குறையை இப்பொழுது மண்டைதீவுக் கிராமசபை போக்குவதற்குத் தீர்மானித்துள்ளது. மண்டைதீவு ஆஸ்பத்திரிக்கு மேற்கிலுள்ள பரந்த புல்வெளியை விளையாட்டுமைதான

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி, சனி

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தினரின் 9-வது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம் மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள விளையாட்டுக் கழகங்களும், சனசமூக நிலையங்களும் இச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன. இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மேற்படி விளையாட்டுக் கழகச் செயலாளர் திரு. மா. ஆனந்தராசாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளன.

## வதிரி வென்றது

உடுப்பிட்டி, வெள்ளி

வதிரி டயமண்ட் விளையாட்டுக் கழகத்தினருக்கும், சாவகச்சேரி விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மைதானத்தில் சிநேகபூர்வமான உதைபந்தாட்ட மோதல் நடைபெற்றது.

வதிரி டயமண்ட் கழகத்தின் விளையாட்டு பாராட்டக்கூடியதாக இருந்தது.

உதைபந்தாட்டம்

## புங்குடுதீவும் காரைநகரும் வென்றன

அல்லைப்பிட்டி, வெள்ளி

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கத்தினரால் காலஞ்சென்ற திரு இ. நல்லதம்பி ஜே. பி.யின் வெற்றிக் கேடயத்திற்காக நடைபெற்றுவரும் 'பி' பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலைய கோஷ்டியினரும் வேலணை ஐயனார் சனசமூக நிலையக் கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர். வேலணைக் கோஷ்டியினர் பல கோல் போடும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டனர். புங்குடுதீவுக் கோஷ்டியினர் மிகவும் வேகமாக விளையாடி 2—0 கோல்களால் வேலணைக் கோஷ்டியினரை தோற்கடித்தனர். இப் போட்டி வேலணை மத்தியகல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான மற்றுமொரு 'பி' பிரிவுப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகக் கோஷ்டியினரும் ...க்க முடியாமல் போய்விட்டது: ஈற்றில் 1—0 கோலால் காரைநகர் கோஷ்டியினர் ஊர்காவற்றுறை கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்: காரைநகர் விளையாட்டுத்திடலில் இப்போட்டி நடைபெற்றது ஆரம்ப முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டிகளுக்கு தீவுப்பகுதி உடற்பயிற்சிப் போதனாசிரியர் பி. பொன்னுச்சுவாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இடமாற்றம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை பட்டின சபையில் குமாஸ்தாவாகக் கடமையாற்றிய திரு. இ. முருகையா ஜனவரி1-ம்திகதி சாவகச்சேரி நகரசபைக்கும் சாவகச்சேரி நகரசபையின் குமாஸ்தாவாகக்கடமையாற்றிய திரு. கிருஷ்ணசாமி காங்கேசன்துறைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

0 0 0

மயிலிட்டி கிராமசபையில் மின் இணைப்பு உத்தியோகத்தராகக்கடமையாற்றிய எஸ் மயில்வாகனம் 2-ம்தரப் பதவி உயர்வு பெற்று ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சாவகச்சேரி நகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

°° °° °°

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டின சபையில் குமாஸ்தாவாகக் கடமையாற்றிய திரு. அ. இராமநாதன் ஜனவரி 1-ம் திகதி தொடக்கம் யாழ். மாநகரசபைக்கு மாற்றப்பட்டுள்ளார்.


இவரின்இடத்துக்கு யாழ் மாநகரசபைக் குமாஸதா திரு. கே. விமலநாதன் மாற்றப்பட்டுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாங்குளம் மாவடி சித்தி விநாயகர் ஆலயத் திருப்பணிச் சபையின் வருடாந்தப்பொதுக்கூட்டம் அண்மையில் மாங்குளம் அ. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்:-

தலைவர். வி. கனகசபை, உபதலைவர்: தி. சிவசுப்பிரமணியம், செயலாளர்கள் பொ. பாலேந்திரன், க. தங்கராசா, பொருளாளர்: ஆ. சண்முகரத்தினம். ஒன்பது பேர்கள் கொண்ட காரியக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.



தொண்டமானாறு திரு. வி. ஆர். வடிவேற்கரசனுக்கும், செனட்டர் திரு. ரி. நீதிராஜாவின் மகள் செல்வி பத்மினிக்கும் பம்பலப்பிட்டியில் சமீபத்தில் நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்துகொண்ட பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மணமக்களை வாழ்த்துகின்றார்.

## புதிய உறுப்பினர்

அல்லைப்பிட்டி, வெள்ளி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்கட்சியின்வேலணை மேற்கு கெட்டில் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. என் ரி சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: த முருகேசு, துணைத்தலைவர் ச முத்துக்குமாரு, காரியதரிசி: நா வடிவேல், துணைக் காரியதரிசி: சு க முருகேசு, பொருளாளர்: க நடராசா, ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ச. ச. நிலைய உத்தியோகத்தர்

மாவிட்டபுரம், வெள்ளி

மாதகல் சந்தி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு நிலைய மண்டபத்தில் திரு. அ. மத்தியாஸ் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். நவரத்தினம், உபதலைவர்: திரு. ஏ. மத்தியாஸ், செயலாளர்: திரு. எஸ். துரைசிங்கம், உபசெயலாளர்: திரு. வி. கந்தசாமி, நிலையப் பொறுப்பதிகாரி: திரு. ஐ. நடராசா. திருவாளர்கள் சி. இராசேந்திரம், மு கந்தசாமி, பொ. நடராசா, வ. மார்க்கண்டு ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## 'கனவை நனவாக்க வேண்டும்'

கோப்பாய், வெள்ளி

'நாவலருக்கு விழாவெடுப்பதுடனே அவரது தொண்டுகள் குறித்து மேடைக்கு மேடை பேசுவதாலோ நமது கடமை முடிந்துவிடவில்லை. அவரது இலட்சியங்களையும், கனவுகளையும் நனவாக்குவதே நாம் அவருக்குச் செய்யும்நன்றிக் கடனாகும்' மேற்கண்டவாறு கோப்பாய் திருவருள் தவநெறி மன்றச்செயலாளர் திரு. இ. பி. ஹரன் கோப்பாய் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் விழாவில் பேசுகையில் கூறினார்.

ஆசிரியர் திரு. ஏ. பொன்னம்பலம் தலைமையில் விழா நடைபெற்றது திரு கே. சதானந்தன் நன்றி கூறினார்

## சந்தேகம்

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் அரசாங்கத்தால் கரவெட்டியில் தொடக்கி வைக்கப்பட்ட ஸ்ரீநாரத பௌத்த வித்தியாசாலையில் அடிக்கடி களவு போவதாக அறிவிக்கப்படுகிறது.

புதிதாக வழங்கப்பட்ட தளபாடங்கள் கூட களவு போய் விட்டதாக பொலீசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இது திட்டமிட்டு நடத்தப் படும் திருட்டோ என் மேலிடத்தார் ஐயம் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றந்த திவ்வியாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி. 5-45 அஸான்.

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-05 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.

......

சாட்சிப் பத்திரங்களுடனும் தராதரப் பத்திரப் பிரதிகளுடனும். பிறப்புச்சாட்சிப் பத்திரப் பிரதியுடனும். அனுப்பப்படல்வேண்டும். விண்ணப்ப மேலுறையில்

இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல்வேண்டும்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்,
வலி-கிழக்குப் ப. நோ. கூ. ச.
சுமாசம்,
நீர்வேலி.

நீர்வேலி,
3-12-69. 1866

இல்லா திருந்த குறையை இப்பொழுது மண்டைதீவுக் கிராமசபை போக்குவதற்குத்தீர்மானித்துள்ளது. மண்டைதீவு ஆஸ்பத்திரிக்கு மேற்கிலுள்ள பரந்த புல்வெளியை விளையாட்டுமைதானமாக்குவதென்று சபை தீர்மானித்துள்ளது. தீவுப்பகுதிக்காரியாதிகாரியின் உதவியுடன் மைதானம் அமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

து... லூரி மைதானத்தில் சிநேகபூர்வமான உதைபந்தாட்ட மோதல் நடைபெற்றது.

வதிரி டயமண்ட் கழகத்தின் விளையாட்டு பாராட்டக்...யதாக இருந்தது. வதிரி கோஷ்டி வீரர்களான மு. பாக்கியராசா, ந. சுந்தரலிங்கம், இ. யோகராசா ஆகியோர் முறையே 3, 3, 1 கோல்களைப் போட்டனர். சாவகச்சேரி கோஷ்டி ஒரு கோலும் போடவில்லை. வதிரி டயமண்ட் சாவகச்சேரி கழகத்தை 7-0 கோல்களால் வென்றது.

திரு. இரா. ஸ்ரீபத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

நடைபெற்றது.

நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான மற்றுமொரு 'பி' பிரிவுப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகக் கோஷ்டியினரும் காரைநகர் நீலிப்பந்தனை சனசமூக நிலையக் கோஷ்டியினரும் மோதிக்கொண்டனர். இப்போட்டியில் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல் மிகவும்தீவிரமாக விளையாடினர். காரைநகர் விளையாட்டுக் கோஷ்டியைச் சேர்ந்த முன்னணி வீரரின் பலமான அடிக்கு றேஞ்சர்ஸ் கோஷ்டியினரின் கோல் காப்பு வீரரினல் ஈடு கொடு

தீவுப்பகுதி உடற்பயிற்சிப் போதனாசிரியர் பி. பொன்னுச்சுவாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ரம், மு. கந்தசாமி, பொ. நடராசா, வ. மார்க்கண்டு ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இது திட்டமிட்டு நடத்தப்படும் திருட்டோ என மேலிடத்தார் ஐயம் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா
நாகேஷ்
நடித்த
தங்கை

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜன
நடித்த
குலவிளக்கு

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
(விரைவில் வருகிறது]
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
எம். ஆர். ராதா-எஸ். எஸ். ஆர்.
நடித்த
இரத்தக்கண்ணீர்
[புதிய கொப்பி]

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
நாகேஸ்வரராவ் - ஜமுனா
நடித்த
தென்றல் வீசும்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
நடித்த
ஜெய்சங்கர் விஜயலட்சுமி
அன்பு வழி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தென்னகத் திரைகளில்
100 நாட்களுக்கு மேல்
ஓடிய வெற்றிச்சித்திரம்
எதிர் நீச்சல்

REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poya, Pre-Poya 4 shows
George Setal
&
Santa Dardar
in
QUILLER
MEMORANDUM

MANOHARA
Daily 4-45, 7&9-45, P. M.
Poya. Pre-poya 4 shows
Shirley Macmaile,
Richard Attelborough
James Booth
in
THE BLISS OF
MRS BLOSSOM


# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

கார்த்திகை மாதம் 21-ம் திகதி (6-12-69)

**மேஷம்**- மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும் சம்பவங்கள் இடம்பெறும். குடும்பவாழ்க்கையில் தென்றல் வீசும். தொழில்துறையிலும் புதிய வாய்ப்புக்கு இடமுண்டு. பெரியோர்களின் ஆதரவும் தவறாது கிடைக்கும்.

**ரிஷபம்**- செய்யும்தொழிலில் சிரமங்கள் தோன்றக் கூடும். உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம். நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடுவதற்கு முனையக்கூடும். அவதானம் வேண்டும்.

**மிதுனம்**- புதியஇடங்களில் இருந்து உங்களுக்கு ஆதரவு வளரும். எதிர்த்தவர்களே உங்கள் நண்பர்களாவார்கள். பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள். முன்னேற்றமானதினம்.

**கடகம்**- வாழ்வுப்பாதையில் வளமான திருப்பம் தென்படும். தொழில்துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். சிலர் வாழ்க்கையில் அரசினர் விருதுக்கும் இடமேற்படும்.

**சிம்மம்**- எதிர்பாராத பொருள்வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிடைக்கலாம். நன்மையான காரியங்களில் பணச்செலவும் ஏற்படும். டாக்டர்கள் தொழிலில் பிரகாசிக்கமுடியும்.

**கன்னி**- ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு சோர்வைத் தரலாம். குடும்பத்திலும் சிறிய பூசல்கள் தலைதூக்கும். தனிவழிப்பயணத்தைக் தவிர்த்துக்கொள்ளவும். அமைதி நன்று.

**துலாம்**- ஆத்திரப்போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இழப்பதற்கு இடமளிக்கும். வேண்டியவர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். மேலதிகாரியுடன் மோதலைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**விருச்சிகம்**- நிதியில் நல்ல அபிவிருத்திகாணப்படுகின்றது. நீண்டநாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும். கணவன் மனைவி உறவுமுறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். சுபதினம்.


**தனுசு**- எதிலும் அலட்சியமனப்பான்மை தோன்றக் கூடும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு. மௌனம் நன்று.

**மகரம்**- அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம். எடுத்த முயற்சியைச் சிறப்பாகச் சாதிப்பீர்கள். பொருள்வரவும் கிடைக்கும்.

**கும்பம்**- வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும் எண்ணம்போல் யாவும் நடக்கும். உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அரசியலிலும் பிரகாசிக்க இடமுண்டு.

**மீனம்**- எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவிசெய்யப்போய் குறைகேட்க நேரிடலாம். உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.


சக்தி வாய்ந்த
சர்வ பூச்சி நாசினி
பொலிடோல் E·605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.


நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

100 சி. சி. ( 4 அவுன்ஸ்) விலை = ரூ. 5/-
250 சி. சி. ( 9 அவுன்ஸ்) விலை = ரூ. 10/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை = ரூ. 35/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.**



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு நாடுகளுடன் நல்லுறவை வளர்க்க கம்யூனிஸ்ட் நாடுகள் தீர்மானம்

மாஸ்கோ, டிச 5

மேற்கு நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதென்று வார்சா ஒப்பந்த நாடுகளின் உச்சிமகாநாடு முடிவுசெய்திருக்கிறது.

மாஸ்கோவில்நடைபெற்ற இந்த உச்சி மகாநாட்டில் சோவியத் யூனியனும் மற்றும் ஆறு சோஷலிஸ்ட் நாடுகளும் கலந்து கொண்டன.

மேற்கு ஜெர்மனியின் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்த வார்சா ஒப்பந்த நாடுகள் அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் மேற்கு ஜெர்மனி கைச்சாத்திட்டிருப்பதையும் பாராட்டின. எல்லா நாடுகளும் கிழக்கு ஜெர்மனியுடன் சமமான உறவு வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டதாக உச்சிமகாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்டது.

ஐரோப்பாவில் அமைதியைப் பாதுகாப்பதற்கும் சமாதான சக வாழ்வுக்கும் தன்னலான முயற்சிகளை மேற்கொள்வதென்றும் வார்சா மகாநாடுகள் தீர்மானித்துள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது

வார்சா மகாநாட்டு அறிக்கையை தற்போது பிரஸ்ஸல்சில் கூடியுள்ள வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளின் மந்திரிகள் மகாநாடு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

## "அணு ஆயுத சோதனைகளை நிறுத்திக்கொள்க!"

### ஐந்து அணு ஆயுத அரசுகளுக்கு ஐ. நா. அரசியல் குழு கோரிக்கை

நியுயோர்க், டிச. 5

அணுஆயுத சோதனைகளை நிறுத்துமாறு ஐந்து அணு வல்லரசுகளையும் ஐ நா. அரசியல் கமிட்டி கோரியிருக்கிறது.

நிலத்துக்கடிச் சோதனை உட்பட சகல அணுஆயுத சோதனைகளையும் நிறுத்தும்படி அந்தக்கமிட்டி கோரியிருக்கிறது.

காற்று மண்டலத்திலும் பூமியின் மேலும் அணு ஆயுத சோதனைகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற ஓரளவு அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் பிரான்சும், நவசீனவும் கைச்சாத்திடவில்லையென்பதும் அந்தஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரும் இரு நாடுகளும் அணுஆயுத சோதனைகள் நடத்தி வருகின்றனவென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகளானாலும் சரி கைச்சாத்திடாத நாடுகளானாலும்சரி எந்தவித வேறுபாடும் இல்லாமல் அணு ஆயுத சோதனைகளை நிறுத்திக்கொள்ளவேண்டும்என்று அரசியல் கமிட்டி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

சிக்காகோவில்

## இரு நீக்ரோர்

## இருவர் பலி எண்மர் காயம்

கல்கத்தா, டிச. 5

கல்கத்தாவில் வர்த்தகப் பகுதியான பாராபஸார் என்ற இடத்தில் தொழிலாளருக்கும் முதலாளிமாருக்குமிடையில் ஏற்பட்ட கலகத்தைச் சமாளிக்கப் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர்; எட்டுப் பேர் காயமடைந்தனர் தீபாவளி போனஸ் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு மீண்டும் வெடித்துக் கைகலப்பு ஏற்பட்டது.

## அல்லைப்பிட்டிக்கு மருத்துவ மாது

அல்லைப்பிட்டி, வெள்ளி

கடந்த பல வருடங்களாக அல்லைப்பிட்டிப் பகுதிக்கு மருத்துவமாது இல்லாததினால் இருந்துவந்த கஷ்டம் இப்போது நீங்கியுள்ளது. கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ இரத்தினத்தின்முயற்சியினால் தற்போது இப்பகுதிக்கு ஒரு மருத்துவமாது நியமிக்கப்பட்டுள்ளார். இம்

மைலாய் படு கொலை

## "பாரபட்சமற்ற விசாரணை கமிஷன் வேண்டும்"

### அமெரிக்க அதிபரிடம் கோரிக்கை

வாஷிங்டன், டிச. 5

வியட்னாமில் அமெரிக்கரின் நடவடிக்கைகள் பற்றி விசாரணைக்கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டுமென்று ஐ. நா.வில் முன்னர் அமெரிக்காவின் தலைமைப் பிரதிநிதியாகவிருந்த ஆதர் கோல்ட்பார்க்கும் மற்றும் அமெரிக்காவின் முன்னைய தூதர்கள், ராஜாங்க இலாகா அதிகாரிகள் பலர் அதிபர். நிக்ஸனைக் கோரியுள்ளனர்.

இராணுவ விசாசரணை போதாதென்றும் வியட்னாம் சம்பவங்கள் பற்றி பாரபட்சமற்ற விசாரணைக்கமிஷன் விசாரணை செய்வதுதான் அமெரிக்காவின் பெயரைப் பாதுகாத்துக்கொள்ள உதவுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தென் வியட்னாமில் மைலாய் என்ற கிராமத்தில் வியட்னாம் பொதுமக்கள் பலரை அமெரிக்கத் துருப்புகள் சுட்டுக்கொன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை தென்வியட்னாமில் கடமையாற்றிய அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் மறுத்தார்

மைலாயில் வியட்னாம் மக்கள் எவரையும் சுட்டுக் கொல்லும்படி தான் உத்தரவிடவில்லையென்றும் யாரும்சுட்டுக்கொன்றதைத் தாம் பார்க்கவில்லையென்றும் யாரையும் யாரும் சுட்டுக்கொன்றதாகத் தமக்கு யாரும் புகார் செய்யவில்லை என்றும் அவர் சொன்னார்.

கம்போடியாவில் ஒரு கிராமத்தை வடவியட்னாமியர் உபயோகிப்பதற்கு கம்போடிய அரசாங்கம் அனுமதி அளித்துள்ள பத்திரம் ஒன்றைத் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாக தென் வியட்னாம் ஜெனரல் ஒருவர் தெரிவித்திருக்கிறார். கம்போடியாவில் காக்காய் என்ற கிராமத்தின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுவீசியிருக்கின்றன.

'பாடசாலைகளில் சேர்க்க

## குழந்தைகளுக்கு 5வயதுச் சட்டம் அநியாயமானது'

மட்டுவில், வெள்ளி

பாடசாலைகளில் குழந்தைகளின் ஆரம்பக் கல்வி ஐந்து வயதின் பின்புதான் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று, அரசாங்கம் வரையறுத்துச் சட்டம் இயற்றியமை ஒரு தவறான காரியமாகும் குழந்தைகளுக்கு இயற்கையாகவே மூன்றிலிருந்து ஐந்து வயது வரை ஆரம்பமாகும் எழுச்சி அறிவை நசுக்கிவிடுவதாக இதுஅமைகிறது. இதனால் எமது எதிர்காலச் சந்ததியினரின் அறிவும், கல்வி நிலையும் பாதிக்கப்படலாம். என சாவகச்சேரி டிறிபேர்க் க஌லூரி மண்டபத்தில் நடைபெற்ற, சாவகச்சேரி பாரதி பாலர் கழகத்தின் 5 வது ஆண்டு பூர்

## தாயகம் திரும்பினர்

மானிப்பாய், வெள்ளி

வாயில்ஏற்படும்புற்றுநோய் பற்றி பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியினை நடாத்தி கலாநிதிப் பட்டம் பெற்ற கலாநிதி சி. கே. திலகரத்தினம் தாயகம் திரும்பியுள்ளார். இவர் மாதகலைச் சேர்ந்த திரு. சு. கந்[illegible]தயா ஜே. பி. அவர்கள[illegible] புதல்வராவர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு சேவை புரிந்து வருகிறார்.

## [illegible]திரி விடுதலை

## 60 வயதுடன் அரசியலிலிருந்து ஓய்வு

பாட்னா, டிச. 5

அரசியல் வாதிகள்அறுபது வயதுடன் அரசியலிலிருந்து ஓய்வுபெற வேண்டுமென்று பூதான இயக்கத் தலைவர் ஆச்சார்ய விநோபாபாவே கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

60 வயதுடன் அரசியல் வாதிகள் அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார். சர்ச்சைக்குரிய அரசியல் பிரச்னைகள் பலவும் நீங்கிவிடுமென்றும் பாவே தெரிவித்தார்.

## தொழிற்கட்சி தோல்வி

லண்டன், டிச 5

பிரிட்டனில் மிட்லன்ட் பகுதியில் நடந்த ஓர் உபதேர்தலில் தொழிற்கட்சியினர் தங்கள் ஸ்தானத்தை கன்சர்வேட்டிவ் கட்சியினருக்கு இழந்துள்ளனர்.

## ரூ.1000 பிணையில் அனுமதி

வல்வெட்டித்துறை, வெள்ளி

கரணவாயைச் சேர்ந்த வேலன் கணபதி என்னும் வயோதிபருக்கு அடித்துக் காயமேற்படுத்தி அதன் நிமித்தம் மரணமேற்படக் காரணமாக இருந்தாரென்பதற்காகப் பருத்தித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நெல்லியடியைச் சேர்ந்த காங்கேசு என்பவரை மாஜிஸ்திரேட் 1000 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு மேல்விசாரணையை இம்மாதம் 14ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்

## விசாரணை ஒத்திவைப்பு

அல்லைப்பிட்டி, வெ[illegible]ளி

வேலணை கிழக்[illegible]ச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராசா என்பவர் சைக்கிளில் சென்று[illegible]டி ருக்கும்போது அந்த இடத்தைச் சே[illegible]த செ. துரைசிங்கம், நா.

# பிரதேசகாங்கிரஸ்கமிட்டிகள் மீது ஸி.எஸ்., நிஜலிங்கப்பா நடவடிக்கை

சென்னை, டிச. 5

குஜராத் பிரதேச காங்கிரஸ் கமிட்டியை காங்கிரஸின் (இந்திரா சார்பு) இடைக்காலத் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் கலைத்துவிட்டு புதிய கமிட்டியொன்றை அமைக்கும் பொறுப்பை குல்ஸாரிலால் நந்தாவிடம் ஒப்படைத்திருக்கிறார். குஜராத் பிரதேச காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்தபின் புதிய கமிட்டியை திரு நந்தா அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்,

புதுச்சேரியில் முன்னாள் முதன் மந்திரி திரு வேங்கட சுப்பராவ் தலைமையில் 21 அங்கத்தவர் கொண்ட புதிய கமிட்டியை திரு, சுப்பிரமணியம் நிறுவியிருக்கிறார்.

கேரள பிரதேச காங்கிரஸ் தலைவரையும் மற்றும் மூவரையும் காங்கிரசிலிருந்து விலக்கியிருப்பதாக திரு நிஜலிங்கப்பா தெரிவித்திருக்கிறார்.

நிஜலிங்கப்பா காங்கிரஸின் ஆதரவாளரான உத்தரப் பிரதேச முதன் மந்திரி திரு சி. பி குப்தா, பாரதீய ஜனசங்கக்கட்சித் தலைவர்களுடன் நேற்று இரண்டு மணி நேரம் ஆலோசனை செய்தார்.

மேற்குவங்காளத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும் வரையும் அங்கு நிரந்தரமான அமைதியேற்படும் வரையும் பங்களா காங்கிரஸ் தனது சாத்வீகப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தும் என்று பங்களா காங்கிரஸ் தலைவர் தெரிவித்தார்.

வறுமைநீங்க

## பகிர்ந்துண்டு பல்லுயிரோம் புக

நீர்கொழும்பு, வெள்ளி

உலகிற்கே உரியவராக விளங்கும் வள்ளுவர் பெருந்தகையின் பொதுமறையில் பாதிக்கும் அதிகமான பகுதி பொருட்பாலுக்காக தரப்பட்டுள்ளது. வள்ளுவர் வகுத்த அறநெறிகளும் இல்லற வழியும் பொருளை ஆதரமாகக் கொண்டனவே,

பொருளைப் புறக்கணித்து புவியில் வாழ முடியாது. எனவேதான் 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்றார். இன்று எமதுநாட்டில் 8லட்சம் இளைஞர்கள் வேலைதேடி அலைகிறார்கள். அவர்களுள் 14,000 பேர் வரை பட்டதாரிகள். நல்ல நாகரீகமான தொழில்தந்து வருமானத்தைப் பெருக்கினாலன்றி மனித வாழ்வு சிறப்புறாது.

வறுமையின் கொடுமை அது செல்வத்திடை வறுமையாக விளங்குவதே செல்வம் பகிர்ந்து அளிக்கப்படுமானால் வறுமை ஒளிக்கப்படலாம் என்பதை உலகில் பல நாடுகள் நிரூபித்துவிட்டன.

வஞ்சகம் செய்யாதுதனது உறவினரை அழைத்துத் தான் பகிர்ந்து உண்டு வருகின்றன காகங்கள். எனவே தான் 'காக்கையும் கரவாது கரைந்து உண்ணும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

இத்தகைய பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பு இன்றைய உலகிற்கு மிகவும் இன்றியமையாதது. இன்றுஇருக்கும்நிலையில்செல்வத்தை பகிர்ந்து கொண்டால் அது வறுமையைப் பகிர்வதாக விளங்கும். ஆனால் தேசிய செல்வத்தை ஒருமுகப்படுத்தி அதைக் காத்து மேலும் பெருக்கி தொழில்பெறும் வாய்ப்புகளையும் தனி மனிதனில் வருமானத்தையும் அதிகரிக்கச் செய்யவேண்டும்''

மேற்கண்டவாறு 30-11-69 மாலை நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தில் இடம் பெற்ற திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவில் பேசிய திரு வ.

## மனைவிக்கு பணம்கட்டாதவர் தாலிக்கொடியைத்திருடினாராம்

மட்டுவில், வெள்ளி

தாலிக்கொடி திருட்டு சம்பந்தமாக கைது செய்யப்பட்டு, மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட ஒருவர் கட்டியமனைவிக்கு படிப்பணம் கட்டாத வழக்கிற்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜராகாது தலைமறைவாகத் திரிந்து வருகின்றார் என்ற உண்மையும் கண்டுபிடிக்கப்பட்டது அவரைரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

குட்டியன் சின்னத்தம்பி என்பவர் கைதடியில் வீடு ஒன்றில் திருடிய தலிக்கொடியை சாவகச்சேரியிலுள்ள நகைக்கடையொன்றில் நிறுத்து விற்கும்போது சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. கே. இராஜரத்தினம் அவரைக்கைது செய்து, மாஜிஸ்திரேட் கே விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்தார்.

குறிப்பிட்ட நபர் கட்டிய மனைவியின் படிப்பணம் கட்டத்தவறிய குற்றத்திற்காக பருத்தித்துறை நீதிமன்றத்தால் விசாரணைக்கு ஆஜராகும்படி விடப்பட்ட கட்டளையை ஏற்றுக் கொண்டும் கோட்டிற்கு ஆஜராகாமல், பலகாலம் தலைமறைவாகத் திரிந்து வருகிறார் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து இந்த நபரை றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார்'

## 'இந்தியாவும் இந்திராவும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் பட்டினசபை நூலக ஆய்வுக்குழுக் கூட்டம் இம் மாதம் 7ம் திகதி நடைபெறுகிறது. திரு. வி. பொன்னம்பலம் எம், ஏ. கூட்டத்தில் கலந்துகொண்டு 'இந்தியாவும் இந்திராவும்' என்னும் பொருள்பற்றி பேசுவார்.

## நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோழிபிடிப்பதற்காக இரவில் சென்றதாகக் கூறப்படும் வாலிபர் கிணற்றுக்குள் வீழ்ந்து நீரில் மூழ்கி மரணமானார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த கிருஷ்ணசாமி செல்வநாதனின் (வயது 24) மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

வாலிபர் கோழிபிடிக்கச்

## "தர்மநெறி மாறுவதில்லை"

தெல்லிப்பளை, வெள்ளி

''சைவமும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...திக்கொள்ளவேண்டுமென்று அரசியல் கமிட்டி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

சிக்காகோவில்

## இரு நீக்ரோ தலைவர்கள் கொலை

சிக்காகோ, டிச. 5

சிக்காகோ நகருக்கருகில் நீக்ரோ விடுதலை இயக்கத்தினருக்கும் பொலிசாருக்குமிடையில் நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் நீக்ரோத் தலைவர்கள் இருவர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர். இரு பொலிஸ்காரர்களும் காயமடைந்தனர்.

நீக்ரோ விடுதலை இயக்கக் காரியாலயத்தில் தாங்கள் நடத்திய திடீர்ச்சோதனையில் பல துப்பாக்கிகளையும் வெடிமருந்துகளையும் கைப்பற்றியதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

இப்போது நீங்கியுள்ளது. கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ இரத்தினத்தின்முயற்சியினால் தற்போது இப்பகுதிக்கு ஒரு மருத்துவமாது நியமிக்கப்பட்டுள்ளார். இம் மருத்துவமாது மண்கும்பான் பகுதி மக்களுக்கும் சேவையாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் சித்திரக்காட்சி

அல்லைப்பிட்டி, வெள்ளி

வேலணை மத்தியகமாவித்தியாலயத்தில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் முயற்சியினால் இம்மாதம் 6ம் 7ந் திகதிகளில் சிறுவர் சித்திரக் கண்காட்சி நடைபெறவிருக்கிறது. வடமாநில சித்திர வித்தியாதரிசி கலாகேசரி ஆ. தம்பித்துரை திறந்து வைக்கும் இக்காட்சியில் 300க்கு மேற்பட்ட சித்திரங்கள் இடம்பெறும்.

## "சாகித்திய மண்டலம் எழுத்தாளரை ஊக்கப்படுத்த வேண்டும்"

வெள்ளவத்தை, வெள்ளி

'பழங்காலத்தில் முச்சங்கம் வைத்து மூவேந்தர்கள் தமிழ் வளர்த்தது போன்று இன்று சாகித்தியமண்டலம் தமிழ் வளர்த்து வருகின்றது. இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய சீரிய முயற்சியைப் பாராட்டுகின்றேன் எம்மை உற்சாகப்படுத்துவதற்காகக் கௌரவ விருது தந்து பாராட்டிய சாகித்தியமண்டலத்திற்கு என் நன்றி.'

இவ்வாறு வித்துவான் ந சுப்பையாபிள்ளை கொழும்பு தேஸ்டன் கல்லூரியில்நடைபெற்ற இல்ங்கை சாகித்திய மண்டல இலக்கியவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

1969-ம் ஆண்டில் சாகித்திய மண்டலப்பரிசு பெற்ற கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுதீன் நா. செல்லத்துரை, பிரான்சிஸ் சேவியர் ஆகியோரைப் பாராட்டிப் பேராதனை பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. வி. செல்வநாயகம் உரையாற்றினார்.

பரிசுபெற்ற படைப்பாளர்கள் தமது படைப்புக்களின் தன்மைபற்றிச் சில நிமிடங்கள் பேசினார்கள்.

கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை பேசுகையில் தமது தேஞறு என்றகவிதை எவ்வாறு உருவானது என்பதை விளக்கினார். இலக்கிய வட்டத்தினரும் அல்வாயூர் கவிஞர் மு செல்லையா, பண்டிதர் க. வீரகத்தி ஆகியோரின் தூண்டுதலும்அவர்களது பாராட்டுதல்களுமே தமது கவிதையாக்கத்திற்கு ஊக்கமளிப்பதாக அமைந்தது என்றார். கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் சாகித்தியமண்டலம் ஊக்கப்படுத்த வேண்டுமேதவிர அவர்களது படைப்புக்களை மட்டந்தட்ட முயலக்கூடாது என்றும் அவர் சொன்னார். தமது கவிதையைப் ப்டிக்காத விமர்சகர்களைப்பற்றியும் திரு. சுந்தரம்பிள்ளை குறிப்பிட்டுக் குறை தெரிவித்தார். இவரது கருத்தைப் பேராசிரியர் வி. செல்வநாயகம் வரவேற்றுப் பேசினார்.

திரு. நா. செல்லத்துரை பேசுகையில் காலத்தை நம்மால் வெல்ல முடியாது. காலம் நம்மைவென்றுவிடும் என்ற கருத்தை முன்வைத்தே தமது புனைகதையைப் படைத்ததாகக் கூறினார்.

நாவற்குழி மகாவித்தியாலய தலைமையாசிரியர் திரு. ஆர். கந்தையா அறிவுக்கும் மகிழ்ச்சிக்குமுரிய குழந்தை நூல்கள் என்பதுபற்றிக் கருத்துரையாற்றினார். சமீபத்தில் வெளியான அம்பிப் பாடலை இவர் மிகவும் பாராட்டினார்.

டாக்டர் வி. சற்குணநாயகம் 'குழந்தையின் மனமும் வாசிப்பு ஆர்வமும்' என்பது பற்றிக் கருத்துரையாற்றினார். ஆரம்பத்தில் வித்துவான் திரு. நா. சுப்பையாபிள்ளைக்கு ஸ்ரீ லங்கா சாகித்தியமண்டலத்தின் பாராட்டுப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

சந்ததியினரின் அறிவும், கல்வி நிலையும் பாதிக்கப்படலாம். என சாவகச்சேரி டிறிபேர்க் களலூரி மண்டபத்தில் நடைபெற்ற, சாவகச்சேரி பாரதி பாலர் கழகத்தின் 5 வது ஆண்டு பூர்த்தி விழாவிற்கு பிரதம விருந்திளராக கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ் மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் கூறினார். இந்த விழாவிற்கு, சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமை தாங்கினார். திருமதி சுவாமிநாதர் பாரதி பாலர்கழக மாணவர்களுக்கும் பரிசில்களை வழங்கினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

5வயது வரையில்தான் குழந்தைகள், ஒலி, ஒளி, சூழ்நிலை ஆகிய இயற்கைச் சகதிகளைக் கொண்டு, அறிவைப் பெறுகின்றன.

"இன்று இலவசக் கல்வியின் மூலம், எத்தனையோ ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் நல்லகல்வி அறிவு பெற்றிருந்தாலும், அதே நேரத்தில் பல பட்டதாரிகள் வேலையின்றி அலைவதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு ஆங்கிலக் கல்வியின் தரக் குறைவும் ஒரு காரணமாக அமையலாம் எனவே தாய் மொழியில்தான் நாம் சகல கல்வியையும் பெற வேண்டும் என்ற நோக்க நோக்கத்தை விடுத்து ஆங்கிலக் கல்வியையும் அவசியம் பயில வேண்டும். இதனால் எமது தமிழ் மொழி என்றும் அழிந்து விடாது: ஒல்லாந்தர் போத்துக்கேயர் காலத்திலேயே அழிந்து விடாத தமிழ்மொழி இனி மேலா அழியப் போகிறது?.

சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கல்வியின் நோக்கம் வாழ்க்கைக்கு நம்மை நாம் தயார் செய்து கொள்வதே, பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு 5 வயது வரையான காலத்திலேயே வீரம், பொதுத் தொண்டு, நேர்மை, சுயமரியாதை, கண்யம், கட்டுப்பாடு ஆகிய மனித சமுதாயத்தின் தலையாய பண்புகளைப் புகட்ட வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

## எப்போது தீரும்?

அல்லைப்பிட்டி, வெள்ளி

வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஓர் கிணறு இல்லாததினால் மாணவர்கள்தேவையான தண்ணீருக் ாக அருகிலுள்ள கடல்நீரையே பாவிக்கின்றார்கள் இந்தக் கஷ்டம் எப்போது திருமென மாணவர்கள் அங்கலாய்க்கிறார்கள்

...புதல்வராவர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு சேவை புரிந்து வருகிறார்.

## எதிரி விடுதலை மீண்டும் வழக்கு

மல்லாகம், வெள்ளி

மண்வெட்டியால் தாக்கி கொலை செய்ய முயற்சித்ததாக சித்தங்கேணி வாசிகள் மூவரின் மீது சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்சில் காயம் அடைந்த நபரை பரிசோதனை செய்த யாழ். பெரியாஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். நரேந்திரனின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டதையடுத்து எதிரிகளை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்த குமாரசாமி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

மாஜிஸ்திரேட் மீண்டும் எதிரிகளை இம் மாதம் 17-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் காயம் விளைவித்ததற்கான குற்றச்சாட்டில் மீண்டும் வழக்குத் தொடரும்படியும் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சித்தங்கேணியைச் சேர்ந்த சேதுநாதன், கனகசபை, குலசூரியர் ஆகியோர்மீது வீ. கந்தசாமி என்பவரை கொலை செய்ய எத்தனித்ததாக சங்கானைப் பொலிஸாரால் இவ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேற் கண்ணுத்துரை, புறக்டர்கள் எஸ். நடராசா, சிவஸ்ரீதரன் ஆகியோர் ஆஜராகினர்.

## 'பெரும்பணி'

உடுப்பிட்டி, சனி

'நாடகங்கள் சமூகத்தின் அம்சங்கள், நாடகங்களை அரங்கேற்றுவதின்மூலம் நாம் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி முன்னேற்றப்பாதைக்கு வழி வகுக்கமுடியும், இதனை ஒரு பெரும்பணியாக நாம்கொள்ளவேண்டும்' என்று கரவெட்டி கிழக்கு வளர்மதி கலைக்கழகத்தின் மாதாந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு ரி பழனி கூறினார்

எதிர்வரும் ஜனவரிமாதல் கலைக்கழகத்தின்ஆண்டுவிழாவைக் கொண்டாடுவது என்றும், சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நல்ல நாடகங்களை அரங்கேற்றுவதுடன் சினிமாவைப் பின்பற்றாமல் புதிய பாடல்களை இயற்றி இசையமைத்து நாடகங்களில் சேர்ப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வேலணை கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராசா என்பவர் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போது அதே இடத்தைச் சேர்ந்த செ. துரைசிங்கம், நா. செல்லையா ஆகிய இருவரும் மோட்டார்க்காரினால் மோதி கொலை செய்ய எத்தனித்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழககு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதவான் ஜனுப் மொகமட் ஜமீல் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் தியாகராசா சென்றதாகக் கூறப்படும் சைக்கிள் நீதிமன்றத்தில் பார்வையிடப்பட்ட பின். மேல்விசாரணை அடுத்த மாதம் மூன்றும் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

மல்லாகம், வெள்ளி

பலாத்கார கருச்சிதைவு வழக்கு விசாரணை பூர்த்தியானதையடுத்து தீர்ப்பு வழங்கு வதை இம்மாதம் 17-ம்திகதிக்கு மல்லாகம்நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி ஒத்திவைத்துள்ளார்.

உத்வி அரசாங்க இரசாயன பரிசோதகர் திரு. எம். ஜெயரத்தினம், டாக்டர் ரி. ஞானசுந்தரம் ஆகியோர் கடந்த தவணையின் போது சாட்சியமளித்தனர்.

நெடுந்தீவைச்சேர்ந்த நான்குபிள்ளைகளின் தாயான திரேசம்மா என்ற பெண் மீது பலாத்காரக்கருச்சிதைவு ஏற்படுத்தி மரணம் விளைவித்தது என்ற குற்றச்சாட்டின் பேரில் சங்கானைப் பொலிஸார் நாகி என்ற வயோதியமாது ஒருவரின் மீதும், இசரத்தினம் என்ற வாலிபர் மீதும் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

## யாழ்ப்பாணத்தில் நூலகவியல் வகுப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை நூலகச் சங்கத்தின் வடபிரதேசக் கிளை மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்த மூன்று வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெருமலிருந்த நூலகவியல் முதல் பரீட்சைக்கான வகுப்புகள் மீண்டும் அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து நடைபெறவிருக்கின்றன, இவ்வகுப்புகள் ஆங்கில மூலம் நடத்தப்படும்.

...கச் செய்யவேண்டும்"

மேற்கண்டவாறு 30-11-69 மாலை நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தில் இடம் பெற்ற திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவில் பேசிய திரு வ. பொன்னம்பலம் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், நீர்வளம் நிலவளம், கனிவளங்களை மனிதன் திட்டமிட்டபொருளாதாரத்தின் அடிப்படையில் வளர்த்தால் 'இலம்' என்று இருந்து ஏங்க அவசியம் வராது. எமது நாட்டின் நன்னீர் வாய்ப்புகளையும் நிலநெய் பெறும் சாத்திய கூறுகளையும் நாம் அவசியம் அளவிட வேண்டும். அதுவே தேசிர செல்வத்தை பெருக்க மிகச் சிறந்த வழியேயாகும் என்றார்.

திரு சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் க. கந்தசாமி. வ. உமாபதிசிவம் காசி ஆனந்தன், நடராசா முதலியோடும் உரையாற்றினர்.

## சேவைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கழத்தில் கடந்த 40 ஆண்டுகளாக 'சாசனக்காப்பாள'ராகக் கடமைபுரிந்து சென்ற மாதம் 25-ம் திகதி இளைப்பாறியுள்ள திரு. வே. சோமசுந்தரத்துக்கு சென்ற மாதம் 30-ம் திகதி 'பிறிமியர் கபே' யில் ஓர் பிரிவுபசாரக்கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய வடமாநிலக் கல்வி அதிபதி திரு, எஸ். தணிகாசலம், திரு. சோமசுந்தரத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினார், இன்னும் பலர் இந்த வைபவத்தில் பேசினர்

ப. நோ. கூ. ச.

## நடப்பு வருட அங்கத்தவர்கள்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

புன்னாலைக்கட்டுவன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டமொன்று சமீபத்தில் கூட்டுறவுத் தலைமைப்பரிசோதகர் திரு. தி. முருகேசு தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோத்தர்தெரிவு செய்யப்பட்டார்கள் திரு. அ. முதலித்தம்பி தலைவராகவும், திரு. செ. சிவராசலிங்கம் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டதோடு நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

...சேர்ந்த கிருஷ்ணசாமி செல்வநாதனின் (வயது 24) மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

வாலிபர் கோழிபிடிக்கச் சென்றபோது, வீட்டுக்காரர் லைட் போட்டதாகவும், இதனால் தப்பி ஓடிய போது வாலிபர் கிணற்றில் விழுந்ததாக விசாரணையில் தெரியவந்தது. மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

வாலிபர் இயக்க

## வேலைத்திட்டத்தில் மாற்றம்

நெடுந்தீவு, வெள்ளி

இங்கு பெய்திருக்கும் மழைகாரணமாக நெடுந்தீவில் வாலிபர் இயக்க வேலைத் திட்டம் மாற்றியமைக்கபபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிய திட்டமாக நெடுந்தீவு கிழக்குப் பிள்ளையார் கோவிலிலிருந்து நெடுந்தீவு மேற்கு கந்தசாமியார் கோவிலை சுருக்கப்பாதையாக இணைக்கும் வீதியை அமைப்பதென்றும் நெடுந்திவு துறைமுக அடைப்புக்கற்கள் சீர்குலைந்திருப்பதால் அவற்றை மீண்டும் கட்டுவதென்றும், துறைமுகத்திற்குக் கிழக்கே ஒரு வீதி பிரயாணிகளுக்கு வசதியாக அமைப்பதென்றும் இணைப்புக்குழுக் கூட்டத்தில் தீரமானிக்கப் பட்டன.

## ஏலத்தில் விற்க முடிவு

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராமசபையினரால் சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வுள்ளது. பல ஊழல்கள் நடைபெறுமல் இருக்கவும் சந்தையின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்யவுமே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிராமசபைத் தலைவர் தெரிவித்துள்ளார், ......

## மீண்டும் சேர்க்கப்பட்டார்

விஸ்வமடு, வெள்ளி

விஸ்வமடு விவசாயப் படை முகாம் பொறுப்பதிகாரியான திரு. என். விஸ்வநாதனை அவமதிக்கத்தக்க நடவடிக்கையில் ஈடுபட்டதாகக்குற்றம் சுமத்தப்பட்டு தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட வீரர் எஸ். சந்தியாகுப்பிள்ளை மீண்டும் விஸ்வமடு முகாமிலேயே வேலைக்கு சேர்க்கப்பட்டுள்ளார்.

...தரவிட்டுள்ளார்

## "தர்மநெறி மாறுவதில்லை"

தெல்லிப்பளை, வெள்ளி

"சைவமும் தமிழும் தழைக்க வந்தநாவலர்பெருமான் தர்மத்தின் வழி ஒழுகியவர். சைவத்துக்குச் சிறப்பாகிய ஆகமங்களின் வழி நடந்தவர். அப்படியே ஒழுக வேண்டும் என வழிகாட்டியவர். இப்போதைய அறிஞர்களிற் சிலர் நாவலர் இப்போது வாழ்ந்தால் என்ற வினவை எழுப்பிவிட்டுத் தம்மனக்கருத்துகளை எல்லாம் நாவலர் மேற்சுமத்துகிறார்கள். அதைவிடப் பாவம் வேறொன்றுமில்லை. மனிதர்கள் மாறலாம். தர்மநெறி மாறுவதில்லை" எனப் புலவர் ம. பார்வதிநாதசிதம் குரும்பசிட்டி சன்மார்க்கசபையில் நடைபெற்ற நாவலர்தின விழாவிற் குறிப்பிட்டார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமையில் விழா நடைபெற்றது. திரு. ஏ. ரி பொன்னுத்துரையும் பேசினார். ......

## சர்வோதய கொள்கை விளக்கம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு - சர்வோதய சங்கத்தின் ஆதரவில் சர்வோதய கொள்கை விளக்கக்கூட்டம் பேராசிரியர் திரு. இ. சதாசிவம் தலைமையில் நேற்றுமாலை நடைபெற்றது.

புங்குடுதீவு கிராமசபை மண்டபத்தில் நடந்த இக் கூட்டத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட உயர்தர மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

"சர்வோதயம் புதுயுகப் பெரும் தத்துவம்" என்ற பொருள் பற்றி திரு. மு. தளையசிங்கமும், "சர்வோதயமும் அரசியலும்" பற்றி திரு. சு. திருநாவுக்கரசுவும் உரைநிகழ்த்தினர்.

ஈற்றில் சர்வோதய இயக்கத் தொண்டர்கள் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

சுழிபுரம், வெள்ளி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இருபதுக்கு மேற்பட்டோர் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்,

தினமும் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில் இந் நோய்க்காக மருந்து எடுக்க வருபவர்களின் தொகையும் அதிகரித்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடவுள் சொர்க்கத்திலோ, மண்ணிலோ அன்றி நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வசிக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் மக்களினத்திற்கு பணி புரிவதன் மூலம் நான் அவரைக் காண முயல்கிறேன். — மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 21-ந் திகதி (6-12-69)


## நமக்கும் பொருத்தமான இரு நல்ல யோசனைகள்

★ அரசியல்வாதிகள் அறுபது வயதுடன் அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுவிட வேண்டுமென்றும் இதனால் சர்ச்சைக்குரிய அரசியல் பிரச்னைகளுக்கு சுலபமாகத் தீர்வுகாணவழிபிறக்கு மென்றும் பூதானஇயக்கத்தலைவர் ஆச்சார்யவினோபாபாவே கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

★ தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்டவும் வகுப்புவாதத்தைக் குறைக்கவும் சிறந்த முறையில் தமது பங்கைச் செலுத்தும் பத்திரிகையாளர் ஒருவருக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசளிப்பதென்று இந்திய ஒற்றுமைக் கழகம் தீர்மானித்திருக்கிறது.

வினோபாஜியின் யோசனையும் இந்திய ஒற்றுமைக்கழகத்தின் தீர்மானமும் இந்தியா சம்பந்தப்பட்ட விஷயமானாலும். இந்தியாவைப் போன்றே பல பிரச்னைகளையும் எதிர்நோக்கும் ஜனநாயக அரசியல் அமைப்பை உடைய, இலங்கை உட்பட்ட ஆசியநாடுகள் சிலவற்றுக்கும் இந்த இரு யோசனைகளும் பொருந்தும்.

ஆட்சிமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பைப் பின்பற்றும் நாடுகளில் ஆட்சி அதிகாரப்போட்டி சகஜம். யார் பதவிக்கு வருவது, எந்தக் கட்சி ஆட்சிபீடத்தில் அமர்வது என்பதில்தான் போட்டி. நாட்டின் நலனையும் மக்களின் நலனையும்கூட மறந்து கட்சியின் நலனையே பெரிதெனக் கருதும் அரசியல்வாதிகளை இந் நாடுகளில் பெரிது காணலாம். நமது நாடு அரசியல் சுதந்திரம்பெற்று இருபத்தியொரு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் பொருளாதார சுதந்திரம்பெறமுடியாமல் பின்தங்கிய நிலையிலிருப்...

...வாதிகளும் சில பத்திரிகையாளர்களும் முற்படுகின்றனர். இன, மத வெறியைக் கிளப்பிவிடுவதற்கு அரசியல் ஆதிக்கப்போட்டி தான் பெரிதும் காரணமென்பதை சமீபத்தில் மலேஷியாவில் ஏற்பட்ட கலகமும் 1956-ம் ஆண்டிலும் 1958-ம் ஆண்டிலும் நமது நாட்டில் ஏற்பட்ட வகுப்புக்கலகங்களும் இந்தியப் பிரிவினையிலிருந்து இப்போது இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களிலும் நடைபெற்றுவரும் சம்பவங்களும் போதிய சான்றுகளாகும்.

அறுபது வயதுக்கு மேற்பட்ட அரசியல்வாதிகள்தான் வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடுகிறார்களென்பதல்ல. அறுபது வயதுக்குட்பட்ட, இளம் வயதுடைய அரசியல்வாதிகளும் வகுப்புவாதத்தைக் கிளப்பி அரசியல்இலாபம்பெற முனைகிறார்களென்பதும் உண்மையே. ஆனாலும் எந்த விஷயத்தையும் சுறுசுறுப்புடன் செய்யக்கூடியவர்கள் இளைஞர்கள்தான் என்பதாலும் ஒரு சமயத்திலில்லாவிட்டாலும் மற்றொரு சமயத்திலாவது நாட்டின் நிலையை உணர்ந்தும் மற்றையோரின் சொல்லைக்கேட்டு நடக்கக்கூடியவர்களும் இளைஞர்கள்தான் என்பதாலும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் அரசியலிலிருந்து ஓய்வுபெற்று, காந்திஜியைப்போல பட்டம், பதவி ஆசையை விடுத்து நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலனையும் முன்னேற்றத்தையும் கருத்தில்கொண்டு தக்கநேரத்தில் தகுந்த யோசனைகளைத் தெரிவித்துவருவதே சிறந்தது.

பத்திரிகைகளைப்பொறுத்தவரை நமது நாட்டில் தேசிய பத்திரிகைகள் என்று...

# "பாண்டிமழவர், ஞானப்பிரகாசர் பரம்பரையில் வந்தவர்"

## நாவலர் பெருமான் பற்றி பண்டிதமணி

உரும்பராய், வெள்ளி

'இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்குமுன் திருநெல்வேலியில் வாழ்ந்தவர் பாண்டிமழவர். நல்லூரை இராசதானியாக்கி அரசாட்சி தொடங்கிய ஆரியச் சக்கரவர்த்தியைச் சோழ நாட்டில் இருந்து அழைத்து வந்தவர் பாண்டிமழவர். ஆரியச் சக்கரவர்த்தியுடன் பாண்டிமழவரால் அழைத்து வரப்பட்ட கங்காதரக்குருக்கள் என்னும் புவனேகபாகுவே ஆரியச்சக்கரவர்த்தியின் மந்திரியாய் இருந்து பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலையும்கட்டினார்.

நமது நாட்டை பறங்கியர் அரசாண்டபோது திருநெல்வேலியில் வாழ்ந்தவர் ஞானப்பிரகாசர். அறுபத்து நாலாயிரம் சைவர்களைக் கத்தோலிக்கராக்கிய ஒலிவேராவின் ஆட்சி அப்போதுநடந்தது, சைவர்களாக இருந்து கத்தோலிக்கர்களாக மாறிய அறுபத்துநாலாயிரம் பேர்களில் நூற்றைம்பதுபேர்பிராமணக் குருமார். இருபது பேர் இராசகுடும்பத்தவர். இவர்கள் ஒலிவேராவின்உத்தியோகப் பேச்சில் எடுபட்டு கிறிஸ்தவர்களானார்கள். மனிதர்களையெல்லாம்-விசேடமாகச் சைவர்களையெல்லாம் இரண்டுகால் மாடாக நடத்திய ஒலிவேரா என்ற அந்தப்பறங்கிக்குஒவ்வொரு குடியிலுள்ளவரும் ஒவ்வொருநாலுகால் மாட்டை-பசுமாட்டை உணவுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கட்டளை இருந்தது திருநெல்வேலி ஞானப்பிரகாசருக்கும் பசுமாடுகொடுக்க வேண்டியமுறை வந்தது. ஒருநாளைக்கு ஒரு பசுமாடு தின்னும் அந்தப்பறங்கிக்கு பசுமாடொன்றை உணவுக்குக் கொடுக்க விருப்பமில்லாத ஞானப்பிரகாசர் இந்த நாட்டையே விட்டுப்போய் இப்பொழுது குன்றக்குடி என வழங்கப்படும் திருவண்ணாமலை ஆதீனத்திற் சேர்ந்து சந்நியாசியானார்.

ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசாட்சி நல்லூரிலே ஏற்படுவதற்குக் காரணமாய் இருந்த திருநெல்வேலி பாண்டிமழவரினதும், பசுக்கொலைக்கஞ்சிய திருநெல்வேலி ஞானப்பிரகாசரினதும் பரம்பரையைச்சேர்ந்தவரே நாமெல்லாம் உய்ய வந்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆவர்'.

இவ்வாறு திருநெல்வேலி இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் விழாவில் பேசிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

வடபிராந்திய சமூகசேவைப் பகுதி அதிகாரி திரு. என். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பண்டிதமணி தொடர்ந்து பேசுகையில், 'நாவலர் பெருமான் சிறுவர்கள் தொடங்கி பெரியோர்கள் வரை படித்துணரக்கூடிய முதலாம் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், சைவவினாவிடை முதலிய அரிய நூல்களைத்தந்துள்ளார். இரண்டாம் பாலபாடத்திலுள்ள முதலாம் வசனம் யாவரும் மனப்பாடம் செய்யவேண்டிய வசனமாகும். அந்த வசனம் 'நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்' என்பதாகும். இந்த அருமருந்தன்ன உயிர் வாக்கியத்தையோ, இந்தத்தேவ அமிர்த வாக்கியத்தைச் செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானையோ நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது' என்று கூறினார்.

நியாயவாதி திரு. சி. பொன்னையா, பண்டிதை ச. அமிர்தாம்பிகை உட்படப் பலர் நாவலர் பெருமானின் தொண்டுகள் குறித்து உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# திருமணத்தை விரும்பும் கத்தோலிக்க குருமாருக்கு சலுகை அளிக்கலாம்

## வண. பிதா ஸ்ரனிஸ்லாஸ் கருத்து

— சந்திப்பு: வி. இன்னாசிமுத்து —

"கத்தோலிக்க குருமார் மணம் முடிக்கும் விஷயத்தில் மேலிடம் சலுகை செய்யவேண்டும்" என்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. பிதா. ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் கூறினார்கள்.

திருமணப் பிரச்னை மூலம் குருமார் சமயத்தை விட்டே விலகச்செய்வது நன்மை பயக்கக்கூடியதல்ல. எனவே அப்படித் திருமணம்செய்ய விரும்புவர்களுக்குப் பொதுவான சலுகை அளிக்க வேண்டும் என எனக்களித்த ...

... டன் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றி தற்போது கத்தோலிக்க சமயத்தில் குருமார்களாகப் பணிபுரிகின்றனர். ஆனால் போலந்தில் ஆயிரம் குருமார்களில் 600 பேர் மணம்முடிப்பதற்காகத் தமது குருப்பதவியைத் துறக்கவேண்டியேற்பட்டது. இதையெல்லா[ம்] பார்க்கும்போது திருமணம் செய்துகொள்வதையே பெரும்பாலான குருமாரும் விரும்புகின்றனர் என்பது [...] '[...]களுக்கு ஒரு [...]கழகம்' என்ற விஷயம் ...

15 சத விகிதத்தினர்கூட முன்னேற முடியவில்லையே யென்ற ஆத்திர உணர்வினால்தானே அரசாங்கம் தனியார் பாடசாலைகளையெல்லாம் சுவீகரித்துக்கொண்டது"

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# வரவேற்பாளர் கவனிப்பார்களா?

1-12-69 இங்கள் [...]

## தபால் மா அதிபர் இங்கு வருகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. வேர்ணன் அபயசேகரா இம்மாதம் 10-ம் திகதி யாழ்ப்பாணம் தபால் நிலையத்துக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்கின்றார்,

யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் புதிதாக இணைக்கப்பட்டிருக்கும் தொலைபேசித் தொடர்பு இயந்திரங்களை (கோட்ஸ்) ஆரம்பித்துவைக்கவே திரு. வேர்ணன் இங்கு வருகின்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்துக்கு அப்பால் தொலைபேசித் தொடர்புகொள்ள இப்போதிருக்கும் தாமதம், இப்புதிய நான்கு கோட்ஸுகளையும் இயங்கவைப்பதால் நிவர்த்தியாகும் என தபால் நிலைய அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

திரு. வேர்ணன் யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார். (கா.நி)

## நாவலர் பாடசாலை நூற்றாண்டுவிழா

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் நாவலர் பாடசாலையின் நூற்றாண்டு விழாவை மிக விரிவான முறையில் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளையும் பாடசாலை வளர்ச்சிக்கான அபிவிருத்தி வேலைகளையும் பாடசாலைப் பழைய மாணவர் சங்கமூலம் மேற்கொள்ளப்போவதாக சங்க செயலாளர் திரு. கே. சதானந்தன் தெரிவித்துள்ளார்.

நாவலர் பெருமானால் கட்டப்பட்ட இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா 1972-ம் ஆண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

---

யாழ்ப்பாணம், சனி

நச்சுத்திராவகம் அருந்தியதாகக்கூறப்படும் மூளாயைச்சேர்ந்த எஸ். நடராசா என்பவர் (35வயது) யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் அறிவிழந்த நிலையிலிருப்பதால் இவரது வாக்குமூலம் இன்னும்பொலிஸரால்பதிவு செய்யப்படவில்லை. (கா.நி)

# நாட்டிலும் நகரிலும்

மழைகாலத்தில் யாழ்ப்பாணப் பொன்னகரத்தின் வீதிகளைப் பார்த்தால், சொறியும், சிரங்கும், குட்டையும் பிடித்த 'அங்கமெலாம் குறைந்தொழுகு தொழு நோயர்' களின் நினைவுதான் வருகின்றது. ஒரு வீதியாவது, சீரானநிலையில் இல்லை. பிரதான வீதிகளே இப்படியென்றால் சின்ன, குறுக்குத் தெருக்களைப்பற்றி சொல்லவேண்டுமா?

மழைபெய்தால் வெள்ளம் நிற்கும் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் வெள்ளம் வருமுன் அணைகோலிக் கொள்ளும் புத்தி 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்' எங்கள் பொதுவேலைப் பகுதி என்ற பி. டபிள்யூ. டி.க்கும் நகர பாதுகாவலனாகிய முனிசிப்பாலிட்டிக்கும் வராது போலிருக்கிறது. வருடம் வருடம் இதேபிரச்னை. இதை பொதுவேலைப்பகுதி தீர்ப்பதா அல்லது முனிசிப்பாலிட்டி தீர்ப்பதா என்பது மற்றொரு பிரச்னை. இந்த இரண்டு ஸ்தாபனங்களும் 'நமக்கென்ன கவலை, அவர்களே தீர்த்துவைக்கட்டும்' என்ற எண்ணத்தோடு இருந்துவிடுவதால் கஷ்டப்படுகிறவர்கள் யார்? நீங்களும் நானும்.

டபிள்டெக்கர் பஸ்வண்டிகளும் லொறிகளும், ட்ராக்டர்களும், கார்களும், மாட்டுவண்டிகளும் தினமும் போய் வந்துகொண்டிருக்கும் வீதிகள் மழைகாலங்களில் கிடங்கும், குட்டையும், பொந்தும் சந்தும் ஆகிவிடுவது சகஜம். இதற்கு முன்கூட்டியே தக்க பரிகாரம் தேட வேண்டும்.

பெரியகடையைச் சுற்றிவர இருக்கும் எல்லா வீதிகளுமே மகா மோசமான நிலையிலிருக்கின்றன, வட்டம் வட்டமாக குழிகளும் குட்டைகளும், சேறும் சுரியும் நிரம்பி வழிகின்றன, ஜனங்கள் பாதையோரத்தில் நடந்துபோவது பெரிய சங்கடமாய்ப் போய்விட்டது. எந்த நிமிடம் ஒரு லொறியோ, காரோ சீறியடித்துக்கொண்டு வந்துகுட்டையைக் கலக்கி துணிமணிகளையும் நாசமாக்கி அவற்றிற்கு ஊடாக உடம்பெல்லாம் செறிந்துவிடுமோ என்ற பயம் நடந்துபோகிறவர்களுக்கு ஏற்படுகிறது. பஸ்நிலையத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் கவிந்து ...

... தென்று சில இடங்களில் வீதிக்குக்குறுக்கே வெள்ளம் ஓடுவதற்கு வாய்க்கால் வெட்டி விட்டிருக்கிறார்கள். இவற்றின்மீது கார்களும் பஸ்ஸுகளும் ஓடும்போது உள்ளேயிருப்பவர்கள் அரை அடி உயரத்துக்கு கெம்பி விழுந்து குடலைக் கலக்கிக் கொள்ளுகிறார்கள், கார்க்காரரும் பஸ்காரரும் இந்த 'சர்க்கீஸ்' விளையாட்டை விரும்புகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. எந்தநிமிடம் வில்லுத் தெறித்துப் போகிறதோ என்று உள்ளூர அவர்களுக்குப் பயம். இபோச பஸ் வண்டிகளில் அநேகமானவை மழைகாலத்தில் 'மக்கர்' செய்வதும் இதனால்தான் என்று சொல்லலாம்

யாழ்ப்பாணப் பொன்னகரத்திலே சாக்கடை என்று சொல்லப்படும் வடிகால்கள் மிகக்குறைவு இருக்கிறசாக்கடைகளும் வருடம் முழுவதும் வேலைமறுப்புச் செய்கின்றன அவற்றில் அழுக்குநீர் வழிந்தோடுவதில்லை, தேக்கமாய் நிற்கும் சுற்றுடல்களில் வசிக்கும் மக்கள் அவற்றில் புழுகிப் பெருக்கும் நுளம்புகளுக்கும் கிருமிகளுக்கும் இரையாகின்றனர் ஒரு முனிசிப்பாலிட்டியின் முதல் கவலை நகரத்தைச் சுத்தமாயும் அழகாயும் வைத்திருக்கவேண்டியது இந்தக் கடமையில் யாழ்ப்பாணத்து முனிசிப்பாலிற்றி இதுவரை கோட்டை விட்டுவிட்டது ஒழுங்கான சாக்கடைகள் இருந்தால் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லை

நிற்க, இத்தனைக்கும் காரணமாயுள்ள மழையானது வேண்டாம் வேண்டாம் என்ற அளவுக்குப் பெய்துகொண்டேயிருக்கிறது போனவருடம் விட்டகுறை எல்லாவற்றையும் தீர்த்துக்கட்டுகிறதோ என்னவோ! நெல் வேளாண்மைக்காரர் 'இனிப் போதுமப்பா' என்று வேண்டுகிறார்கள், வயல்களில் நிறைய வெள்ளம் நிற்கிறது கதிர்கள் முற்றி மணியாவதற்கு போதுமான வெள்ளம் இனி தைமாதத்தில் ஒரு சின்னமழைபெய்துவிட்டால் போதுமானதுஎன்பது அவர்களுடைய அபிப்பிராயம் ஆனால், மழை நாம் நினைத்தபடி பெய்கிறதா?

—வழிப்போக்கன்

## இலக்கியவிழா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சியல் சுதந்திரம்பெற்று இருபத்தியொரு ஆண்டு களுக்கு மேலாகியும் இன்னும் பொருளாதார சுதந்திரம்பெறமுடியாமல் பின்தங்கிய நிலையிலிருப்பதற்குக் காரணம் அதிகாரப்போட்டியை அடிப்படையாகக்கொண்ட கட்சி அரசியல்போட்டிதான். இந்தப் போட்டி காரணமாக ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு மக்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கான குறுக்குவழிகளை அரசியல் வாதிகள் நாடுகிறார்கள். மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய முறையில் பிரசாரம் செய்து அவர்களின் வாக்குகளைப் பெறலாமென்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள். இன மதமொழித் துவேஷத்தைக் கிளப்பிவிடுவதன் மூலம் மக்களின் உணர்ச்சி வெறியைத் தூண்டிவிடுகிறார்கள். இவர்களின் பிரசாரத்தை இன்னும் ஒருபடி மிஞ்சி வியாபாரநோக்கத்துடன் சில பத்திரிகைகளும் செய்திகளை வெளியிடுவதுடன் தலையங்கங்களையும் தீட்டுகின்றன. கட்டுரைகளையும் பிரசுரிக்கின்றன. இதன் விளைவு மக்களிடையில் வேற்றுமை அதிகரிக்கிறது. சகோதரர்களாக வாழ்ந்தவர்கள் திடீரென்று பகைவர்களாகிறார்கள். ஒருவருக்கொருவர் சண்டையிடுகின்றனர். அநியாயமாகப் பல உயிர்கள் பலியாகின்றன. இன, மதப் பூசல்களை கிளப்பி அரசியல் ஆதாயம் பெறுவது மட்டுமல்ல. தொழிலாளர்கள் மத்தியிலும் கட்சி அரசியலைப் புகுத்தியும் தங்கள் நோக்கத்தை அடைய அரசியல்

திலகொண்டு தக்கநேரத்தில் தகுந்த யோசனைகளைத் தெரிவித்துவருவதே சிறந்தது.

பத்திரிகைகளைப்பொறுத்தவரை நமது நாட்டில் தேசியப் பத்திரிகைகள் என்று கூறிக்கொள்ளும் பொறுப்புள்ள சில பத்திரிகைகளும் கூட பொறுப்பற்றமுறையில் இன, மத உணர்வைத் தூண்டிவிடக்கூடிய முறையிலும் 'துவேஷத்தைக் கிளப்பிவிடும் முறையிலும் செய்திகளை வெளியிட்டும், கட்டுரைகள், கடிதங்களைப் பிரசுரித்தும், தலையங்கங்கள் தீட்டியும் வருவதை நாடறியும். வகுப்புவாதத்தைத் தூண்டி, தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கக்கூடிய முறையில் தன்பங்கைச் செலுத்தும் பத்திரிகையாளர் தான் ஆற்றல்வாய்ந்தவராகக் கருதப்படும் காலம் இதுவென்றுகூடக் கூறத் தோன்றுகிறது.

இச்சமயத்தில் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாக்கவும் வகுப்புவாதத்தை நீக்கவும் சிறந்தமுறையில் தன் பங்கைச் செலுத்தும் பத்திரிகையாளருக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசளிப்பதென்று இந்திய ஒற்றுமைக்கழகம் தீர்மானித்திருப்பதுஇலங்கை மலேசிய நாடுகளும் பின்பற்றக்கூடிய முன்மாதிரியாகும். இங்குள்ள பொது ஸ்தாபனங்கள் அல்லது தேசியஒருமைப்பாட்டில் ஆர்வமுள்ள பிரதமராவது இந்திய ஒற்றுமைக்கழகத்தைப் பின்பற்றி இங்கும் இப்படியொரு திட்டத்தை கொண்டுவருவது பயனளிக்குமென எதிர்பாக்கலாம்.

# 'தங்கரதத்தை' தேடிச்சென்ற 'காமாட்சியை' காணவில்லை?

திருக்கோணமலை, வெள்ளி

மீன் பிடிப்பதற்குச் சென்று காணமல் பான வள்ளமொன்றை தேடிச் சென்ற 9 பேரையும் வள்ளத்தையும் தேடி ஆகாயப் படை விமானம் தேடுதல் நடத்துகிறது. இச்சம்பவம் திருக்கோணமலைக் கடலில் நடைபெறுகின்து,

'தங்கரதம்' என்ற மீன் பிடி வள்ளம் ஆழ்கடலுக்குச் சென்று பல நாட்களாகத் திரும்பாததால் அதைத் தேடி 'காமாட்சி' என்ற வள்ளம் 9 பேருடன் புறப்பட்டதாம். ஆனல் 'காமாட்சி'யும் இன்னும் திரும்பவில்லை.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன் பேரில் தீவிர தேடுதல் நடத்திய விமானம் 'என்ஜின்' கோளாறு காரணமாக நடுக்கடலில் தத்தளித்த திசை மாறிச் சென்ற 'தங்கரதம்' என்ற வள்ளத்தை கல்குடாவில் கரை சேர்ப்பித்தது. 'காமாட்சி'யை இதுவரை காணவில்லையாம். தேடுதல் தொடர்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலகச்செய்வது நன்மை பயக்கக்கூடியதல்ல; எனவே அப்படித் திருமணம்செய்ய விரும்புவர்களுக்குப் பொதுவான சலுகை அளிக்க வேண்டும் என எனக்களித்த பேட்டியில் தெரிவித்தார்.

''கத்தோலிக்க குருமார் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும், சிலர் திருமணம் செய்துள்ளதாகவும் செய்திகள் வெளிவருகின்றனவே இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்'' என நான் கேட்டதற்கு வண. பிதா பதிலளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்.

''சங்கடமான ஒரு கேள்வியைக் கேட்டுள்ளீர்கள். கத்தோலிக்க குருமார் என்னும்போது பாப்பரசரின் தலைமையிலுள்ளவர்களைத்தான் கூறிகிறீர்கள் போல் தெரிகின்றது. கத்தோலிக்க சமயத்திலும் வைதீக திருச்சபை லத்தீன் திருச்சபை என்று இரு பிரிவுகள் இருக்கின்றன. வைதீக திருச்சபையினர் பாப்பரசரின் தலைமையை ஏற்றுக்கொள்கிறார்கள். என்றாலும் அவர்கள் குருவாக வருவதற்குப் படித்துக்கொண்டிருக்கும்போது 5-ம் பட்டம்பெறுவதற்கு முன்பு விருப்பமானல் விவாகம் செய்யலாம். அப்படி அவர்கள் விவாகம் செய்வதால் அவர்களைப் போல் தாங்களும் விவாகம் செய்தால் என்ன என்ற எண்ணம் லத்தீன் திருச்சபையினரிடையே, அதாவது நீங்கள் குறிப்பிட்ட கத்தோலிக்க சமய குருமாரிடையே எழுகின்றது.

இன்னும்,இளவயதிலேயே குருப்பட்டம் கொடுக்கப்படுவதால், அனுபவக் குறைவு ஏற்படுகிறது. மீசாமில் தனித்து சேவை செய்யும்போது வெளியுலகத் தொடர்பு அதிகமாக வேண்டியுள்ளது. அவ்வெளியுலகத் தொடர்பின்போது, மக்களின் பல பிரச்னைகளைத் தீர்த்துவைக்கவும் வேண்டிவரும். மக்களிடையே என்ன பிரச்னைகள் உள்ளன என்பது பற்றி அறிய வாழ்க்கையில் முழு அனுபவமும் பெருத குழுமாரால் முடிவதில்லை. திருமணம் செய்துகொண்டால் ஓரளவு மனித சமூகத்தின் பிரச்னைகளைத் தெரிந்து கொள்ள உதவியாக இருக்குமென்பது எனது நம்பிக்கை. எனினும் பாரம்பரியமாக விருந்து வந்த ''குருமார் திருமணம் செய்யக்கூடாது'' என்ற சட்டத்தில்மாறுதல் ஏற்படுவது நல்லதல்ல. அப்படியிருந்தும் ஆஸ்திரேலியாவில் சமீபத்தில் அங்கிலிக்கன் திருச்சபையில் குருமார்களாயிருந்த மூவர் தங்களது மனைவி மக்களு

மணம் செய்துகொள்வதனையே பெரும்பாலான குருமாரும் விரும்புகின்றனர் என்பது புலனுகின்றது.

'தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்' என்ற விஷயம் நம்மத்தியில் அலுத்துப் போன ஒரு விஷயமாகிப் போய்விட்டபோதிலும் இது பற்றி நான் அடிகளிடம் கேட்டேன். தமிழ்ப்பல்கலைக்கழகமா அன்றேல் இந்துப் பல்கலைக்கழகமா என்னும் பிரச்னைதான் தமிழர்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் கிடைக்காதிருப்பதற்குக் காரணமாயிருப்பதாகப்பேசிக்கொள்ளப்படுவதாகவும் இதில் எந்தப் பல்கலைக்கழகத்தைத் தாங்கள் வரவேற்பீர்களென்றும் கேட்டதற்கு வண. பிதா கூறியதாவது

''பல்கலைக்கழகம் எந்தப் பெயரில் வந்தாலென்ன,பல்கலைககழகத்தில் விஞ்ஞானம், கலைப்பிரிவு, வைத்தியப்பிரிவுகள் ஏற்படுத்தப்படத்தான் வேண்டும் அதுபோல எல்லாச்சமயத்துக்கும் ஒவ்வொரு பிரிவையும்ஏற்படுத்திக்கொண்டால் பிரச்னை இருக்காது என்பது என் கருத்து. பல்கலைக்கழகம் இங்கு ஆரம்பமாகத் தாமதமானல், தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி நிலை மோசமடையும். யாழ்ப்பாணம் மட்டக்களப்பு போன்ற தமிழ்ப்பகுதி மாணவர்கள் கல்வியில் கெட்டிக்காரராயிருக்கும்போது சிங்களப் பிள்ளைகள

## சிரமதானத்தில் தேவாலய புதிய வீதி

யாழ்ப்பாணம், சனி

வெத்திலைக்கேணி புனித அந்தோனியார் தேவாலயத்திற்குப் பிரதான வீதியிலிருந்து மேற்படி தேவாலயத்திற்குச் சேர்ந்த வாலிபராலும் பெரியவர்களாலும் சிரமதான முறையில் அமைக்கப்பட்ட வீதியை மேற்படி கோவில் கட்டளைக் குரவராகிய வண. லெபோன் சுவாமி கார்த்திகை 30-ந் திகதி ஞாயிறு வாரம் திறந்துவைத்தார். இத்திறப்புவிழாவில் புனித அந்தோனியார் கோவில் கிறிஸ்தவர்கள் பங்கு பற்றினர்கள். பங்குக்குரவர் நன்றி கூறினர்.

## புதிய கட்டிடம்

வேலணை,வெள்ளி

வேலணை கி. ச தலைவரின் முயற்சியால் மத்திய வாசிகசாலைக்கான கட்டிடம் உருவாகி வருகிறது. இக்கட்டிட வேலைகள் இன்னும்சிலதினங்களில் பூர்த்தியடையவுள்ளன.

# [illegible] கவனிப்பார்களா?

1-12-69 திங்கள் மாலை 6 மணியளவில் பெங்ளுர் உதைபந்தாட்ட வீரர்கள் பலாலி விமானநிலையத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு அங்கே சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. அதன்பின்னர் 12மைல் தூரத்திலுள்ள யாழ் நகருக்கு மோட்டார் பவனியாகச் சென்றார்கள். அவர்களுடைய விசேஷ மோட்டார்வண்டிக்கு முன்னல் ஒரு மோட்டார்வண்டியில் விமானநிலையம்தொடக்கம் யாழ். நகர் வரைக்கும் ஒலிபெருக்கியில் ஓரன்பர் 'இதோ பின்னல் கன்னட உதைபந்தாட்ட வீரர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள், உங்கள் மகிழ்ச்சியை, ஆதரவை அவர்களுக்கு உங்கள் கரங்களை அசைத்துத் தெரிவியுங்கள்' என்று பொதுமக்களை அன்புடன் வேண்டிச்சென்றார். இதுதான் முதன்முறை, வேறு நாட்டு வீரர்களை யாழ்ப்பாணம் மேலைத்தேசமுறையில் சிறப்பாக வரவேற்றது.

யாழ்.நகருக்கு எவ்வளவோ பெரிய அரசியல்விற்பன்னர்களும், இலக்கிய மேதைகளும், சினிமா நட்சத்திரங்களும், வருகிறார்கள். இரகசியமாகப் பொதுமக்களுக்குத் தெரியாமல் யாழ். மண்ணில் நடமாடிவிட்டுத் தங்கள் நாடுகளுக்குப் போய் விடுகிறார்கள்.

சென்ற மாதம் எமது நாட்டுப் பிரதம அமைச்சரும், மற்றும் அவரது சக அமைச்சர்களும் காங்கேசன்துறைமுக அத்திவாரக்கல் நாட்டு விழாவிற்கு வந்தார்கள். அவர்களை அந்நேரம் திறந்த ஜீப்வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் சென்றிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும். ஆனல் இங்கு வரவேற்பாளர்கள் விடும் தவறுதலால் பொதுமக்கள் தங்கள் நாட்டுத் தலைவர்கள் யாரென்பதை நேரில் பார்த்து அறியமுடியாதவர்களாக இருக்கிறார்கள்.

அண்மையில், முன்னள் ஐ. நா. தலைவி திருமதி விஜயலட்சுமி பண்டிட், தமிழ்நாடு சட்டசபைச் சபாநாயகர் புலவர் கோவிந்தன் போன்றோர் யாழ். நகர் வந்து சென்றது பலருக்கும் தெரியாது.

எதிர்காலங்களிலாவது வரவேற்பாளர்கள், இந்த விளையாட்டுவீரர்களை வரவேற்ற பாணியில் அனைவரையும் வரவேற்பார்களாக.

ஐ. இராமசாமி
புன்னலைக்கட்டுவன்

## வாக்காளர் கடமை

தற்பொழுது நம் நாடு அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறவிருக்கும் ஆட்சிமன்றப் பொதுத்தேர்தலை எதிர்நோக்கியவண்ணமுள்ளது. நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கென பல அரசியல் கட்சிகளும் முன்வந்துள்ளன. பல புதிய கட்சிகளும் இவ்வேளையில் தோன்றியுள்ளன. தேர்தல் காலம் நெருங்க நெருங்கக் கட்சிகள் தோன்றுவது நமது நாட்டில் சகஜம்:

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பல கட்சிகள் தோன்றுவது - பரிதாபத்திற்குரிய நிலை - பல தரப்பட்ட கொள்கைகளாலும் இலட்சியங்களாலும் மக்களைப் பிளவுபடுத்தும் ஒரு வழி. இது தமிழ் வாக்காளர்களைப் பெரும் சோதனைக்குட்படுத்துவதாகும்.

தமிழ்மக்கள் தம்முள் பிளவுபட்டமையே தமது உரிமைகளைப் பெறமுடியாததற்குக் காரணமாகும். இந்நிலையில் புதிய கட்சிகள் தோன்றி மேலும் தமிழினத்தைப் பிரிப்பது வருந்தத்தக்கது.

சிலர் தனிப்பட்ட சமூகத்தின் சார்பிலும் ஆட்சிமன்றப் பிரதிநிதிவத்தும் கோருகின்றனர்; இது எம்மினத்திடையே ஒற்றுமையை மேலும் சீர்குலைப்பதாகும். இவை யாவற்றுக்கும் பாடம் கற்பிக்கவேண்டியது வாக்காளப் பெருமக்களது கடமை. இன்றைய நிலையில் ஒற்றுமையே நமது உயிர் நாடி.

ஆர். பி. ஹரன்
கோப்பாய்.

0 0 0

## நேரசூசியை மாற்றுவார்களா ?

நெடுந்தீவின் முதுகெலும்பு போல் அமைந்திருக்கும் பிரயாண சேவையைச் சீராக்கி மூன்று தடவைகளாக அதிகரித்திருப்பதை நெடுந்தீவு மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளார்கள். இருந்தும் பிரயாணிகளுக்கும் மோட்டார் வள்ளத்தின் சிப்பந்திகளுக்கும் வசதியாக சிறு திருத்தத்தை நேரசூசியில் ஏற்படுத்தினல் எல்லோருக்கும் வசதியாக இருக்குமென இங்குள்ள பொதுமக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். தற்போது நெடுந்தீவிலிருந்து காலை 7 மணிக்கும் காலை 11 மணிக்கும், மாலை 2 மணிக்கும் புறப்படுவதை காலை 7 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் மாலை 3 மணிக்குமாகவும் குறிக்காட்டுவானிலிருந்து நெடுந்தீவிற்குப் புறப்படும் நேரங்களான காலை 9-30 மணி, பிற்பகல் 12-30 மணி, மாலை 3-30 மணியாகியவற்றை காலை 8-30 மணிக்கும், பிற்பகல் 1-30 மணிக்கும் மாலை 4 மணிக்குமாகவும் மாற்றினல் வெளியூர்களிலிருந்தும் நெடுந்தீவிலிருந்தும் பிரயாணம் செய்யும் அரசாங்க ஊழியர் உட்படப் பலருக்கும் பொருத்தமாக இருப்பதோடு நெடுந்தீவில் தங்கி வரும் சிப்பந்திகளுக்கு காலை 9-30 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரைக்கிடையிலும் ஒய்வு நேரத்தில் தங்களுடைய மதிய போசனத்துக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து உணவையும் அருந்திவிட்டுப் புறப்பட அவர்களுக்கும் வசதியாக இருக்கும். இவ்வசதிக்கேற்ப நேரசூசியை பொதுமராமத்து இலாகா அதிகாரிகள் மாற்றியமைப்பார்கள் என்றே நெடுந்தீவுப் பொதுமக்கள் பெரிதும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

ஒரு பிரயாணி

றிற்கு ஊடாக உடம்பெல்லாம் செறிந்துவிடுமோ என்ற பயம் நடந்துபோகிறவர்களுக்கு ஏற்படுகிறது. பஸ்நிலையத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் கவிந்து கொட்டும் சனத்திரளுக்கு ஆஸ்பத்திரிக்கும் பெரிய கடைக்கும் போகும் வழியில் 'சளக்' என்று சேற்றுலபிஷேகம் நடக்கிறது. இதற்குத் தப்பி அந்தப்பக்கம் காலை எடுத்துவைத்தால் முழங்கால்வரை சேற்றில் புதைந்து காலணிகள் எல்லாம் நாசமாய்ப் போகின்றன.

இவையெல்லாம் போதா

## ஏகமனதான தீர்மானமல்ல

நயினதீவுப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்னும் தீர்மானம் நயினதீவு கிராமசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக ஈழநாடு இதழில் வெளிவந்த செய்தி எதிர்காலத்தில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தக்கூடியதாகும். இது ஏகமனதான தீர்மானமன்று. நானும் வேறுசிலரும் இத்தீர்மானத்தை எதிர்த்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நா. க. துரைமணி
கி. ச. உறுப்பினர்,
1-ம் வட்டாரம்,
நயினதீவு.

பிராயம் ஆனல், மழை நாம் நினைத்தபடி பெய்கிறதா?

—வழிப்போக்கன்

## இலக்கியவிழா கொண்டாடினர்

விஸ்வமடு, வெள்ளி

விவசாயப்படை முகாமில் அண்மையில் இலகியவிழா கொண்டாடப்பட்டது இம் முதலாவது இலக்கிய விழாவில் வீரர்கள் பலர் உரையாற்றினர். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய முகாம் பொறுப்பதிகாரி திரு. என் விஸ்வநாதன் பேசுகையில் ''வேலைகளை முடித்துவிட்டு வீரர்கள் வீண்பராக்கில் ஈடுபடாமல் இருக்க இதுபோன்ற இலக்கிய விழாக்கள் பெரிதும் உதவுமென்றும், விவசாயப் படைஉலகில் இப்படி ஒரு இலக்கியவிழா கொண்டாடுவது இதுவே முதற்தடவையென்றும் சொன்னர். வீரர் என். கந்தசாமி எழுதிய ஏழையின் காதல்' என்ற சிறுகதை படித்துக்காண்பிக்கப்பட்டது. முகாம் இலக்கிய குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

போஷகர்கள் எம்.பொன்னுத்துரை, எம் ஆனந்தராசா, தலைவர்: சிவசண்முகவடிவேல்' செயலாளர்' ஆ பத்மநாதன், பத்திராதிபர்: அன்ரன் லெஸ்ருட், பரிசோதகர்: எஸ். கணேசபிள்ளை.

## கல்வியதிகாரியை பேட்டிகண்டனர்

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையின் உடனடித் தேவைகள் சிலவற்றை உடன் செய்து தருமபடி வட்டுக்கோட்டை தொகுதிஆட்சிமன்றஉறுப்பினர் திரு. அ.அமிர்தலிங்கம் தலைமையில் பாடசாலைப் பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கோஷ்டியினர் வடமாநில கல்வி அதிகாரி திரு. எஸ். தணிகாசலத்தை வியாழக்கிழமையன்று பேட்டிகண்டனர்.

தலைமையாசிரியரையும் மேலும் உதவி ஆசிரியரையும் நியமித்தல்வேண்டும். பாடசாலையின் இருமண்டபங்களுக்குமிடையே யுள்ள 'ஒடைவளவை' அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும். பாடசாலையைப் புனருத்தாரணம் செய்தல்வேண்டும் என இப்பேட்டியில் கோரப்பட்டது. இவ்விடயங்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனக் கல்வி அதிகாரி உறுதியளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org